பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 165

ஞாயிற்றுக்கிழமை
11 மே 2025

சித்திரை 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வல்வை இந்திரவிழா நாளை

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறை முத்துமாரி அம்மன் ஆலயத் தீர்த்தத் திருவிழாவை முன்னிட்டு, வல்வை மக்களால்

14

# முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரம் இன்றுமுதல் உணர்வுபூர்வமாக ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மே 11

கொத்துக்கொத்தாக ஈழத் தமிழினம் கொன்றொழிக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் தேசத்திலும் இன்று ஆரம்பமாகியுள்ளது.

14



## மாற்றானுக்கு இடமில்லை; நிரூபிக்கப்பட்டது மக்களாணை

விரிவு பக்:-03

## குருந்தூர்மலை அடிவாரத்தில் பண்படுத்தல்; மூன்று விவசாயிகள் பொலிஸாரால் கைது!

முல்லைத்தீவு, மே 11
முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு, குருந் தூர்மலை அடிவாரத்தில், தமது பூர்விக நிலங்களில் விவசாய நடவடிக்கையை மேற்கொள்வதற்காகப் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்ட மூன்று தமிழ் விவசாயிகள் முல்லைத்தீவுப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
குருந்தூர்மலையில் அத்துமீறி அமைக் கப்பட்டுள்ள

14

## மீண்டும் அடாவடித்தனத்தில் தொல்லியல் திணைக்களம்!

### ரவிகரன் எம்.பி. கண்டனம் கைதானோரைச் சந்தித்தார்

முல்லைத்தீவு, மே 11
முல்லைத்தீவு குருந்தூர்மலைப் பகுதியில் தொல்லியல் திணைக்களத்தின் அடாவடித்தனம் தற்போதும் தொடர்கின்றது என்று நாடாளுமன்ற

14

## திஸ்ஸ விகாரை மீண்டும் போர்!

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம்தையிட்டியில் சட்ட விரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரையை அகற்றக் கோரியும், விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள காணி

14




### ஆட்சியை மட்டும் கருதாமல்

## தமிழ்த் தேசியத்துக்காக இணைந்தால் தமிழரசோடு பயணிப்பதற்குத் தயார்!

### கஜேந்திரகுமார் எம்.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 11
உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதை மட்டும் நோக்காகக் கொண்டிராமல், தமிழ்த் தேசியத்தின்பால் பயணிப்பதற்கான

14




'முள்ளிவாய்க்காலுக்கும் நீதியில்லை, திஸ்ஸவிகாரை விவகாரத்துக்கும் முடிவில்லை பாருங்கோ'

### யாழ்ப்பாணம் மாவட்டத்தில்

## கூட்டுறவுச் சங்கங்களில் உப்பு இருப்பு தாராளம்!

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பலநோக்குக் கூட்டுறவுச்

14

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4069 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 11 13 22 27 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1136 |
| வெற்றி இலக்கினம் | கும்பம் |
| வெற்றி இலக்கங்கள் | 09 18 39 44 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0095 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கங்கள் | 7 7 4 2 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2175 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 03 18 50 73 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5827 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 0 7 9 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1857 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 16 20 41 52 |
| விசேட எழுத்து | C |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 10.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0402 |
| ஆங்கில எழுத்து | L |
| வெற்றி இலக்கங்கள் | 0 7 9 1 |

### கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்ற

# தென்னிலங்கைக் கட்சிகள் இரவிரவாக மந்திராலோசனை

**கொழும்பு, மே 11**

**இலங்கையில் மிகவும் பெரிய மாநகரசபையான கொழும்பு மாநகர சபையைக் கைப்பற்றுவதற்கு தென்னிலங்கையில் பிரதான எதிர்க்கட்சிகள் கடந்த மூன்று நாள்களாக இரவுவேளைகளில் கொழும்பிலுள்ள சொகுசு ஹோட்டல்களில் விவாதித்து வருவதாக அரசியல்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் பிரதேசசபைகள் மற்றும் மாநகரசபைகளில் அதிகாரத்தை நிறுவுவது பற்றி கலந்துரையாடல் இடம்பெற்றுள்ள நிலையில், கொழும்பு மாநகர சபை மீதே அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையில் யார் ஆட்சியை நிறுவுவது என்பதே பிரதான பேசுபொருளாக மாறியுள்ளது. எனினும் இதுவரை தீர்க்கமான முடிவினை எட்ட முடியாத நிலையில், அரசியற் கட்சிகள் திணறிவருகின்றன. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்துக்குப் பிறகு இந்த விடயம் குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. நடந்து முடிந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகளுக்கு அமைய, கொழும்பு மாநகரசபையில் ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி 48 ஆசனங்களையும் எதிர்க்கட்சிகள் 69 ஆசனங்களையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 10.05.2025 | சனிக்கிழமை | 0535 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| E | 1 3 8 8 5 7 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.05.2025 | சனிக்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2801 | L | 10 37 39 74 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 22 23 49 68 | 4962 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 10.05.2025 | சனிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0680 | 26 29 31 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.05.2025 | சனிக்கிழமை | |
| கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 11 31 42 60 | 4513 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 10.05.2025 | சனிக்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 07 | 06 35 43 47 | 1977 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 10.05.2025 | சனிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| S | 12 36 58 61 | 2627 |



## பங்களாதேஷ் பிரஜைகள் கைது

கொழும்பு, மே 11

சட்டவிரோதமான முறையில் இலங்கையில் தங்கியிருந்த 34 பங்களாதேஷ் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

விசாக் காலம் பூர்த்தியானதன் பின்னர் நாட்டில் தங்கியிருந்த பிரஜைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் விசேட விசாரணைப் பிரிவினரால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

## உயிரை மாய்த்துக்கொண்ட மாணவியை ஆசிரியர் துஷ்பிரயோகித்தமை உறுதி

### பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

உயிரை மாய்த்துக்கொண்ட கொட்டாஞ்சேனைப் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமி, பம்பலப்பிட்டியிலுள்ள பாடசாலையொன்றில் கல்வி கற்றுவந்த காலப்பகுதியில் அந்தப் பாடசாலையின் ஆசிரியரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளமை தெரியவந்துள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரான ஆசிரியர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் அவருக்கு வெளிநாடு செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## குற்றஞ்சாட்டப்பட்ட ஆசிரியர் தே.ம.ச. ஒருங்கிணைப்பாளர்

### அதனாலேயே மூடிமறைப்பா? நாமல் கேள்வி

கொழும்பு, மே 11

கொட்டாஞ்சேனையில் மாணவி ஒருவரைப் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஆசிரியர், மத்திய கொழும்புக்கான தேசிய மக்கள் சக்தி ஒருங்கிணைப்பாளர் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் தேசிய மக்கள் சக்தியில் ஒருங்கிணைப்பாளராக இருப்பதாலேயே இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் அடக்க முயற்சிக்கிறதா? என்றும் அவர் நாடாளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார். (ச-இ)

## அமைச்சர் சரோஜா பதவிவிலகவேண்டும்

### ரோஹிணி கவிரத்ன தெரிவிப்பு

கொழும்பு, மே 11

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சருக்கான பொறுப்பில் இருக்கும் சரோஜா போல்ராஜ், சர்ச்சைக்குரிய மேலதிக வகுப்பு ஆசிரியரைப் பாதுகாக்கும்வகையிலேயே செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார். எனவே அவர் இந்த அமைச்சுப்பதவியை வகிப்பதற்கு பொருத்தமற்றவர். எனவே அவர் உடனடியாக அமைச்சுப் பதவியைத் துறக்கவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தற்போது பேசுபொருளாகியுள்ள கொட்டாஞ்சேனைப் பிரதேசத்தில் உயிரை மாய்த்துக்கொண்ட பாடசாலை மாணவி தொடர்பில் பெண்ணாக, தாயாக, ஆசிரியராக, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சரோஜா போல்ராஜ் பொறுப்பின்றிச் செயற்படுகின்றார். பாடசாலையில் துன்புறுத்தலுக்கு உள்ளானதோடு மாத்திரமின்றி, மேலதிக வகுப்பொன்றிலும் துன்புறுத்தலுக்கு உள்ளான குறித்த மாணவி மனநலம் பாதிக்கப்பட்டிருந்தார் என அமைச்சர் குறிப்பிடுகின்றார். அந்த மாணவி உளரீதியாக பாதிக்கப்பட்டிருந்தார் என்பதற்காக இந்த சம்பவம் மூடி மறைக்கப்படவேண்டும் என்று அமைச்சர் கூறுகின்றாரா? அவர் இந்தச் சம்பவம் தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் இந்த அமைச்சுப் பதவியை வகிப்பதற்கு அவர் பொருத்தமற்றவர் என்பது தெளிவாகியுள்ளது- என்றார். (ச-இ)



# மாற்றானுக்கு இடமில்லையென நிரூபித்திருக்கிறது மக்களாணை

## நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 11**

**வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீக தாயகம். எம்மை நாமேதான் ஆளவேண்டும். மாற்றானுக்கு இங்கு இடமில்லை என்று உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மக்கள் தெளிவான செய்தியை சொல்லியிருக்கிறார்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: -

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் சிங்களத் தேசியக் கட்சிகளை குறிப்பாக தேசிய மக்கள் சக்தியை நிராகரித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு அமோக ஆதரவு கொடுத்துள்ளனர்.

தமிழ் மக்கள் கூட்டணி போட்டியிட்ட தொகுதிகளில் மக்கள் எமக்கு பெரும் ஆதரவை வழங்கியிருக்கின்றமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். யாழ். மாநகரசபை உள்ளிட்ட பல தொகுதிகளிலும் எமது வேட்புமனுக்கள் நியாயமற்றமுறையில் நிராகரிக்கப்பட்டன. எனினும் எமது கட்சிக்கு மக்கள் வழங்கியிருக்கின்ற ஆதரவை எதிர்காலத்தில் தமிழ் அரசியலில் காத்திரமான பங்களிப்பை எமது கட்சி வழங்கவேண்டும் என்று மக்கள் வெளிப்படுத்தியுள்ள அவாவாக நான் பார்க்கின்றேன்.

மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைவாக எமது கட்சியை மேலும் பலபடுத்தி தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வுக்கு பாடுபடுவதற்கு நாம் திடசங்கற்பம் கொண்டுள்ளோம்.

வட மாகாணத்தில் எமது கட்சியிலிருந்து 18 பேர் உள்ளூராட்சிசபைகளுக்குத் தெரிவாகியிருக்கின்றார்கள். சில சபைகளில் நாம் ஏனைய கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கும் வாய்ப்பும் இருக்கிறது.

எமது அரசியற்கைதிகள் இன்னமும் சிறைகளில் வாடுகின்றார்கள். அபகரிக்கப்பட்ட காணிகள் விடுவிக்கப்படவில்லை. மாறாக, பல்லாயிரக்கணக்கான காணிகளை மேலும் அபகரிப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வை நிராகரித்துவிட்டார்கள் என்று சர்வதேச சமூகத்துக்கு வெளிப்படையாகவே கூறிவந்த அரசாங்கத்தினர் இனியாவது தமது கருத்துகளைத் திருத்திக்கொள்வார்களாக - என்றார். (ச-இ)

# கஞ்சாவுடன் இருவர் ஒட்டுசுட்டானில் கைது

முல்லைத்தீவு, மே 11

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியிலிருந்து வவுனியா சென்ற இருவர் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுசுட்டான் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய கற்சிலை மடுப்பகுதியில் வைத்து அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து இரண்டு கிலோ கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் வவுனியாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கஞ்சாவைக் கொள்வனவு செய்வதற்காக புதுக்குடியிருப்புக்கு வந்துள்ளார்கள் என்றும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேகநபர்களையும் சான்றுப்பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-19)



# தொலைபேசிக் கேபிள்கள் அபகரித்தோர் கைது!

மன்னார், மே 11

சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான 17 கிலோ செப்புக்கம்பி மற்றும் தொலைபேசிக் கேபிள்கள் ஆகியவற்றுடன் இருவர் மன்னார் ஜிம்ரோ நகர்ப்பகுதியில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மாவட்ட குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி உ.பொ.ப மதுரங்க அதிகாரிகள் குழுவால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் 19 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-213)

# கடை உரிமையாளர் மீது முகமூடிக்கும்பல் தாக்குதல்

## அச்சுவேலியில் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 11

அச்சுவேலியில் உணவக உரிமையாளர் ஒருவர் மீது முகத்தை மூடியவாறு வந்த இனந்தெரியாத கும்பலொன்று தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 6.15 மணியளவில் நடந்தது.

அச்சுவேலி மருத்துவமனை முன்பாக உணவகமொன்றை நடத்தி வருபவர் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

அச்சுவேலி மருத்துவமனை வீதியூடாக குறித்த நபர் தனது கடையைத் திறப்பதற்கு சென்றவேளை இடைவழியில் மறித்த இனந்தெரியாத கும்பல் அவர் மீது கடுமையாகத் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது. தாக்குதலில் பலத்த காயங்களுக்குள்ளான உரிமையாளர் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ச-26,125,23)

# விளையாட்டு விழா

பளை, மே 11

பளை தம்பகாமம் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டு விழா, கழக மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜி.சி.எஸ்.கே. குலரத்ன, கௌரவ விருந்தினர்களாக தம்பகாமம் கிராம அலுவலர் திருமதி சு. ஜீவிதா, தம்பகாமம் பிரதேசசபை உறுப்பினர் சு.சுரேன், பச்சிலைப்பள்ளி இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ். சுஜிதரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச- 25,9)

# புதுவருடவிழா

கிளிநொச்சி, மே 11

பளை மாசார் வளர்மதி விளையாட்டுக்கழகத்தின் சித்திரைப் புதுவருட குதூகல விழா மாசார் பாடசாலை மைதானத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விழா ஒருங்கிணைப்பாளர் க. வினோஜன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராகப் பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர் கலந்துகொள்வர். (ச-25,9)



# வேட்பாளர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 11

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் வலிகாமம் தெற்குப் பிரதேச சபையில் போட்டியிட்டு வெற்றியீட்டிய வேட்பாளர்களுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் சுன்னாகத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய்த் தொகுதிக் கிளையின் தலைவரும் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையில் போட்டியிட்டு வெற்றிபெற்ற வேட்பாளருமாகிய தியாகராஜா பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் 18 வட்டாரங்களில் 13 வட்டாரங்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி தனதாக்கிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச-125)

# தமிழர் தாயகத்தை முடக்குகின்ற பிரச்சினைகளைக் களையுங்கள்

## சைவ மகாசபை கோரிக்கை




**யாழ்ப்பாணம், மே 11**

**வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் எமக்குத் தெரியாமலே புரையோடி வளர்ந்துவரும் பிரச்சினைகள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் உடன் கவனம்செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் நாம் காத்திரமான எமது சந்ததியை இழக்கநேரிடும் என்று அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச்செயலாளரும் மருத்துவருமான பரா நந்தகுமார் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், தாய்மண்ணின் தற்போதைய பிரதான சவால்கள் குறித்து மக்கள் பிரதிநிதிகள் அதிக கவனம் செலுத்தவேண்டும். எதிர்கால சந்ததியை ஆரோக்கியமிக்கதாகவும் சிறந்ததாகவும் மாற்றுவதற்கு அவை துடைத்தெறியப்படவேண்டும்.

தற்போது தாயகத்தில் குறைந்துவரும் சனத்தொகையும் பிறப்புவீதமும், இளைஞர்களிடையே அதிகரித்த போதைப்பாவனை, மருத்துவ ஆளணி நெருக்கடி, அதிகரிக்கும் உயிர்மாய்ப்புகளும் குடும்ப வன்முறைகளும், தாய்சேய் இறப்பு, அதிகரிக்கும் விபத்துகள், தொற்றாநோய்கள் என்பன புரையோடிக் காணப்படுகின்றன. இவை தொடர்பில் சரியான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படவேண்டும். இதற்கு அனைவரும் விரைந்து செயற்படவேண்டும் - என்றார். (ச-125)

## சித்திராப்பூரணை வழிபாடுகள்

யாழ்ப்பாணம், மே 11

யாழ்.குடாநாட்டு ஆலயங்களில் நாளை திங்கட்கிழமை சித்திராப் பௌர்ணமியை முன்னிட்டு சிறப்புப் பூஜை வழிபாடுகள் மற்றும் சித்திரைக் கஞ்சி வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

இறந்த ஆத்மாக்களுக்கான பிதிர் சங்கற்ப வழிபாடுகளும் இடம் பெறவுள்ளன. (ச-25,17)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மே 11

ஏழாலை அத்தியடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்த தேர்த் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளது.

புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் வீதியுலா வரவுள்ளார். நாளை திங்கட்கிழமை தீர்த்தோற் சவம் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## நுவரெலியாவில் களைகட்டிய வெசாக்

நுவரெலியா, மே 11

வெசாக் வாரத்தை முன்னிட்டு நுவரெலியா நகர் முழுவதும் வெசாக் பந்தல்கள், தோரணங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் பௌத்த விகாரைகளில் மத வழிபாடுகளுக்கும் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரம் பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

வெசாக்கின வாரத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் பல்வேறுநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள் என. இதில் மூவினங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றும் பெரஹராவும் நடைபெறவுள்ளது. (ச-இ)

## மன்னாரில் தேசிய மக்கள் சக்திக்கு கைக்கு எட்டியது வாய்க்கு எட்டுமா?

மன்னார், மே 11

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மன்னார் மாவட்டத்திலுள்ள பலசபைகளிலும் தேசிய மக்கள் சக்தி, கணிசமான ஆசனங்களைப்பெற்றுள்ளபோதும்தனித்தோ அல்லதுகூட்டணிஅமைத்தோ ஆட்சியமைக்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக நானாட்டான்பிரதேசசபையில் அந்தக் கட்சி ஆறு ஆசனங்களைப்பெற்று முன்னிலை வகித்த போதும் தனித்தோ அல்லது கூட்டணி அமைத்தோ ஆட்சி அமைக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நானாட்டான் பிரதேசசபையில் போட்டியிட்டு இரண்டு ஆசனங்களைப் பெற்ற சுயேச்சைக்குழுவினருடனும் கங்காருச் சின்னத்தில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தைப் பெற்றுக்கொண்ட தொழிலாளர் கட்சியுடனும் ஆட்சியமைப்பதற்கு தேசிய மக்கள் சக்தி மாபெரும் முயற்சி எடுத்துவருவதாக அறியமுடிகிறது.

எனினும் குறித்த உறுப்பினர்களைக் கொண்ட கட்சிகள் தங்களுக்குத் தவிசாளர் பதவி தந்தால் மாத்திரம் இணைவோமெனத் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகின்றது. (ச-213)

## குழாய் நீர் விநியோகம் பதிவுகள் மேற்கொள்க

யாழ்ப்பாணம், மே 11

சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட மட்டுவில் கிராமத்தில் நீர் வழங்கல் சபையினால் குடியிருப்பாளர்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது. இதற்கான பதிவுகள் மண்டுவில் பொதுநோக்கு மண்டபத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

முதற்கட்டத்தில் விண்ணப்பிக்கும் பயனாளிகளுக்கு அரை மானிய அடிப்படையில் நீர் விநியோகம் செய்யப்படும்.

விண்ணப்பப்படிவத்தை கிராம அலுவலர் பிரிவு அல்லது அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் பெற்று பூர்த்திசெய்து தேசிய அடையாள அட்டையின் புகைப்படப்பிரதி மற்றும் வீட்டு உறுதியின் புகைப்படப்பிரதி ஆகியவற்றுடன் அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25, 9)

## போத்தல் 'கள்' அடைக்கும் நவீன நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், மே 11

கொடிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் போத்தலில் 'கள்' அடைக்கும் நவீன நிலையமொன்று கடந்த வாரம் வரணியில் திறந்துவைக்கப்பட்டது. நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் என்.வேதநாயகன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு நிலையத்தை திறந்துவைத்தார். (ச-41-17)





## சிரித்திரன் சுந்தரின் ஒளிப்படக் காட்சிகள்!

யாழ்ப்பாணம்,மே.11

சிரித்திரன் சுந்தரின் கேலிச்சித்திரங்களின் ஒளிப்படக் காட்சிகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் நுண்கலைத்துறையினரது கலைக்கூடத்தில் திர்வரும் 16 ஆம் திகதி வரை திங்கள், செவ்வாய் பொதுவிடுமுறை நாள்கள் தவிர்ந்த ஏனைய நாள்களில் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவுள்ளது. ஆர்வமுடையவர்கள் பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-22,125)

## நல்லை ஆதீனத்துக்கு சாந்திப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம் , மே 11

ஸ்ரீ வசந்தபுரம் நாகபூசணி அம்பாள் ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில், மறைந்த நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகளின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அன்றையதினம் விசேட தேவைக்குட்பட்டோர் மற்றும் வறிய மாணவர்களுக்கான உதவித்திட்டங்கள் வழங்குதல், திருமறை பாராயணம் செய்தல், அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குக் கற்றல் உபகரணம் வழங்குதல் போன்றன இடம்பெற்று தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படுமென என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ச-25)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

## குருதிச் சகதியில் குளித்தெழுந்து...

உலகையே உறையவைத்த இந்த நூற்றாண்டின் மாபெரும் துயரான, இலங்கையின் இறுதிப்போரில் இடம்பெற்ற தமிழினப் படுகொலையின் 16ஆவது வருடத்தை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் இன்று ஆரம்பித்திருக்கின்றது. முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல், அஞ்சலி நிகழ்வுகள் என தமிழர் தாயகத்தை துயரில் தோய்ந்த நாள்களின் நினைவுகள் கௌவத் தொடங்கியிருக்கின்றன.

முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இறுதி அஞ்சலிப்பு நிகழ்வுகளை வழக்கம்போல், உணர்வெழுச்சியுடன் முன்னெடுப்பதற்கு அத்தனை ஏற்பாடுகளும் உரிய கட்டமைப்புகள் ஊடாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எனினும், அஞ்சலிப்புகளையும் முள்ளிவாய்க்கால் நினைவுகளையும் சமூகமயப்படுத்தப்படவேண்டிய - அடுத்த சந்ததிக்கு ஊடுகடத்தவேண்டிய பெரும் பொறுப்பு ஒவ்வொரு தமிழ்த் தேசியக் கட்சிக்கும், சமூகக் குழுக்களுக்கும், சிவில் சமூகச் செயற்பாட்டுத் தளங்களுக்கும் வலுவாக இருக்கவே செய்கின்றது. இந்த அஞ்சலி நிகழ்வுகள், கிராமங்கள்தோறும் எவ்வளவுக்கு எவ்வளவு விரிவாக்கப்படுகின்றதோ அது அவ்வளவுக்கவ்வளவு நீதிக்கான பாதையை அகலத்திறக்கும். ஆதலால், இந்த வாரத்துக்குரிய தாற்பரியத்தை உணர்ந்து ஆத்மத்தில் இருத்தி செயற்படவேண்டியது எம் அனைவரினதும் தேசியக் கடமையாகும். அத்துடன், நம்பிக்கையற்ற யாசகனைப்போன்று ஒவ்வொரு வருடமும் 'நீதியை மன்றாட்டமாகத் தேடும்' இனக் குழுமமாகத்தான் இந்த அஞ்சலிப்புகளை நாம் மேற்கொள்ளப் போகின்றோமா? என்ற கேள்வியும் இங்கெழுவது தவிர்க்கப்படமுடியாததாகின்றது.

இலங்கையில் இறுதிப்போரின்போது தமிழ் மக்கள் இனப்படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர், தமிழர்கள் மீது வகைதொகையின்றி போர்க் குற்றங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன என்று வெளிப்படையாக ஏற்றிருந்தது 'உலக அரசாங்கம்' என்று தன்னைக் கூறிக்கொள்ளும் ஐ.நா.. ஆனால், தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகளுக்கு என்ன நீதியை ஐ.நா. வழங்கிவிட்டது? ஒன்றரைத் தசாப்தம் கடந்த பின்னரும்கூட நீதியைநிலைநாட்டி ஆறாத ரணத்துடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் காயங்களுக்கு கொஞ்சமேனும் மருந்திடுவதற்கு என்ன பொறிமுறைகளை ஐ.நா. உருவாக்கியுள்ளது? இறுதிப்போரின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளைத் தேடுவதைப்போன்று இந்தக் கேள்விகளுக்கான பதில்களையும் தமிழினம் தேடித்தேடிக் களைத்துப்போய்விட்டது.

'உள்நாட்டுப் போரில் இடம்பெற்ற விடயங்களுக்கான நீதிப்பொறிமுறையை அரசாங்கமே வகுக்கும்' என்று சிறீலங்கா நாடாளுமன்றத்தில் வைத்தும், சர்வதேசத்தின் முன்னாலும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்த கருத்தின் பின்புலம்கூட ஐ.நா. வழங்கிய அளவுகடந்த கால அவகாசங்களின் நீட்சியாகவே கொள்ளவேண்டியிருக்கின்றது. நீதிக்காக ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கும் தமிழினத்துக்கான நம்பிக்கைக் கீற்றொளி எங்கும் தென்படட்டதாயில்லை. இன்னும் எத்தனை காலம்தான் தமிழர்கள் இவ்வாறு நொந்துகொண்டிருப்பது. ஒவ்வொரு வருடமும் நடைபெறும் நினைவேந்தல்கள் ஆற்றாமையின் நீட்சியாகவும் அமைந்திருக்கின்றன. இவ்வருடமும் கூட...

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நாம் பலவீனமாக இருப்பதாலேயே, பலமாக இருப்பதாக பாசாங்கு செய்கிறோம்.

– பௌலோ கொய்லோ –



## அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன்



கொழும்பு, மே 11

அரச ஊழியர்களுக்கு பேரிடர் கடன் வழங்குவது தொடர்பான புதிய விதிகள் அடங்கிய புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் இந்தச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. 2025 ஆம் ஆண்டு வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் அரச ஊழியர்களின் குறைந்தபட்ச அடிப்படைச் சம்பளத்தில் ஏற்படும் அதிகரிப்பைக் கருத்திற்கொண்டு, அரச ஊழியர்களுக்கு அதிகபட்சமாக 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா முதல் 4 இலட்சம் ரூபாவரை பேரிடர் கடன்களை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (ச-இ)

## வெசாக் பண்டிகைக்கு 7,437 தன்சல்கள்

கொழும்பு, மே 11

வெசாக் பண்டிகைக்காக தற்போது 7,437 தன்சல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு மட்டத்தில் தன்சல்கள் பதிவுசெய்யும் பணிகள் நடைபெற்றுவருகின்றன என்றும் அதன் செயலாளர் சமில் முத்துக்குடா தெரிவித்தார். (ச-இ)





## பெரமுனவின் செயற்பாட்டு பிரதானியாக ஜோன்ஸ்டன்

கொழும்பு, மே 11

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியின் புதிய செயற்பாட்டுப் பிரதானியாக முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் விசேட கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உள்ளூராட்சிமன்றங்களுக்கான உறுப்பினர்களை நியமிப்பதற்காக முன்னாள் அமைச்சர் காமினி லொக்குகேவின் தலைமையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## இறைச்சிக்கடைகள் 3 நாள்கள் பூட்டு

கொழும்பு, மே 11

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து இறைச்சிக் கடைகளும் மூன்று நாள்களுக்கு மூடப்படும் என உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, பல்பொருள் விற்பனை நிலையங்கள் உட்பட அனைத்து இறைச்சிக் கடைகளிலும் நாளை 12ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை இறைச்சி விற்பனை செய்யப்படாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## அரசியலமைப்புச்சபைச் செயலர் பதவிவிலகல்

கொழும்பு, மே 11

அரசியலமைப்புச் சபையின் செயலாளராகப் பணியாற்றிய நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க அந்தப் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

தனிப்பட்ட காரணங்களுக்காக, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் செயலாளர் பதவியில் இருந்து விலகுவதாக அவர் அரசியலமைப்புச்சபைக்கு அறிவித்துள்ளார். அதன்படி அவரது பதவிவிலகலை அந்தச் சபை ஏற்றுக்கொண்டதாக நாடாளுமன்றத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-இ)

நாளை
திங்கட்கிழமை- சித்திரை 29
12.05.2025
சுபநேரம் : 11.54- 01.24
ராகுகாலம் : 07.24 - 08.54



(ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமாகச் செயற்படும் நாள். தந்தை வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். சகோதரர்கள் குடும்பம் தொடர்பான விஷயத்தில் உங்களிடம் ஆலோசனைகேட்டு வருவார்கள். சிலருக்கு அவ்வப்போது சிறுசிறு சலனங்கள் ஏற்பட்டுநீங்கும். மாலையில் பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** இன்றைக்கு புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது. சிலருக்கு நண்பர்கள் மூலம் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். தாய்வழி உறவினர்கள் மூலம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிக்கு ஒத்துழைப்புத் தருவார்.

**மிதுனம்:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக இருக்கும். மனதுக்கு மகிழ்ச்சிதரும் சம்பவம் நடைபெறும். பிள்ளைகளின் உற்சாகம் உங்களையும் தொற்றிக்கொள்ளும். சகோதரர்கள் மூலம் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் விருப்பத்தைப் பூர்த்திசெய்வீர்கள்.

**கடகம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் கையில் இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்குத் தாய்வழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும். வாழ்க்கைத்துணைவழியில் மகிழ்ச்சியான செய்தி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்கள் அனுகூலமாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள்சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. உங்கள் தேவையறிந்து நண்பர் செய்யும் உதவி மகிழ்ச்சிதரும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். குடும்பம் தொடர்பான முக்கியமுடிவு எடுப்பதற்கு உகந்தநாள். ஆனாலும் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். மற்றவர்களிடம் பேசும்போது நிதானம் அவசியம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**துலாம்:** உறவினர்கள் வருகையால் திடீர்ச் செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். சிலருக்கு வாழ்க்கைத்துணையின்மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. உங்கள் முயற்சியில் எதிர்ப்புகளைக் கடந்து வெற்றிபெறுவீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**விருச்சிகம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். தாயிடம் கேட்ட உதவி கிடைக்கும். உடல்நலனில் கவனம்தேவை. சிலருக்கு எதிர்பாராத செலவுகளுடன் தேவையற்ற அலைச்சலும் ஏற்படும். பிள்ளைகளால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக கணவன் மனைவிக்கிடையே பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச்செல்வது நல்லது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் மறையும்.

**மகரம்:** தொடங்கும் காரியங்கள் வெற்றி பெறும். தேவையான பணம் கிடைக்கும். தாய்வழி உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** இன்றைக்கு பதற்றம் தவிர்த்து எதிலும் நிதானமாகச் செயற்படவும். சிலருக்கு தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் ஏற்படும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**மீனம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். புதிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் உங்கள் யோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள். பிள்ளைகள் கேட்டதை மகிழ்ச்சியுடன் வாங்கிக்கொடுப்பீர்கள்.

# ஜொலிபாஷ் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 11

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில், யாழ். இந்துக்கல்லூரியின் மாணவர்கள், பழையமாணவர்களை ஏலம் மூலம் அணிகளாகப் பிரித்து நடத்தப்படும் மாபெரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது.

இந்த ஜொலிபாஷ் கூடைப்பந்தாட்டத் தொடரில் கடந்த வருடம் நடைபெற்ற முதலாவது தொடரை மஞ்சுதன் தலைமையிலான ஜொலி கிங்ஸ் அணி கைப்பற்றி சம்பியனாகியிருந்தது. இன்று மாலை 6 மணிக்கு தனது முதலாவது போட்டியில் ஜொலி ரஸ்ரி போய்ஸ் அணியினை எதிர்த்தாடவுள்ளது.

இந்த வருடமும் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றும் நம்பிக்கையோடு மஞ்சுதன் தலைமையில் நிசனன், அனுசன், சர்மிலன், கஜீபன், சங்கீர்த்தன், ஹரி, நிசாந்தன், திவ்வியப்பிரியன், துவார்சன், ராஜா, கபிலன், சரனியன், சீரோன், ஆதிரன் ஆகிய நட்சத்திர வீரர்களை உள்ளடக்கிய பலமான அணியாக களமிறங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-25)

# ‘பேசாததைப் பேசுவோம்’ யாழில் விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், மே 11

உலகப் பேறுகால உளநல வாரத்தின் நிறைவுநாளை முன்னிட்டு "பேசாததைப் பேசுவோம்" என்ற தொனிப்பொருளில் விழிப்புணர்வுக் கருத்தரங்கு, யாழ். பொது நூலகக் கேட்பார் கூடத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பேறுகால உளநலம் சார்ந்து, பல்வேறு கோணங்களில் பலர் உரையாற்றவுள்ளனர்.

அத்துடன் உளமருத்துவ நிபுணர் எஸ். சிவதாஸின் "பேறுகால உளநலம்" எனும் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது. அத்துடன் விழிப்புணர்வு நடைபவனி ஒன்றும் காலையில் நடைபெறவுள்ளது. நடைபவனி யாழ். போதனா மருத்துவமனை முன்றலில் இருந்து காலை 8 மணிக்கு ஆரம்பமாகி பொதுநூலகத்தை வந்தடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)





# பல்கலைக்குத் தெரிவான மாணவர்களுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், மே 11

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4, 5, 7ஆம் இடங்களைப் பெற்று பல்கலைக் கழகத்திற்குத் தெரிவான மாணவர்களை வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று வாழ்த்திக்கௌரவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் 4ஆவது நிலையைப் பெற்ற செம்மலைப் பகுதியைச் சேர்ந்த செம்மலை மகாவித்தியாலய மாணவி மதியழகன் ஜதிகா, 5ஆம் நிலையைப் பெற்ற மாமூலைப் பகுதியைச் சேர்ந்த வித்தியானந்த கல்லூரி மாணவன் ஜெகதீஸ்வரன் சஜிந்தன், 7ஆவது நிலையைப்பெற்ற உடையார்கட்டு மகாவித்தியாலய மாணவன் கார்த்திகேசன் கலைப்பிரியன் ஆகியோரை நேரில் சென்று வாழ்த்தியதுடன் பாராட்டுகளையும் தெரிவித்தார். (ச-41-246)

# நீர்வேலிக் கந்தனுக்கு இன்று இரதோற்சவம்

யாழ்ப்பாணம், மே 11

நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் தேர்த்திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும். தீர்த்தத் திருவிழா நாளை திங்கட்கிழமையும், மறுநாள் செவ்வாய்க்கிழமை சித்திராப் பூரணையன்று மாலை திருக்கல்யாண உற்சவமும் இடம்பெறும். (ச-25, 17)

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த வெள்ளிக்கிழமை நிகழ்வு ஆச்சிரம சுவாமிகள் கலாநிதி செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் பண்டிதர் செஞ்சொல் வேந்தர் சைவப்புலவர் எஸ்.ரி.குமரன் "திருப்பெருவடிவம்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றினார். (ச-41)







# மின்மாற்று அபிவிருத்தி கருத்திட்டத்துக்கு அனுமதி

கொழும்பு, மே 11

**உயர் முன்னுரிமை மின்மாற்று அபிவிருத்திக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

இலங்கை மின்சாரசபையால் தயாரிக்கப்பட்டுள்ள 2023 - 2032 ஆண்டுக்கான நீண்ட கால மின்மாற்றுத் திட்டத்தின் கீழ் அடையாளங்காணப்பட்டுள்ள உயர் முன்னுரிமை மின்மாற்று அபிவிருத்திக் கருத்திட்டக் கோவையை நடைமுறைப்படுத்துவதற்காக முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின் கீழ் நிதியுதவி வழங்குவதற்கு உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன.

உத்தேச முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின்கீழ் 10 கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அடையாளங் காணப்பட்டுள்ளது. சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தின் மூலம் வழங்கப்படவுள்ள 10 மில்லியன் டொலர் பிணை வசதியுடன் கூடிய உலக வங்கி 40 மில்லியன் டொலரையும், ஆசிய அபிவிருத்தி வங்கி 30 மில்லியன் டொலரையும் முதலீடு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இணைந்து வழங்குகின்ற முழுமையான பரஸ்பர நம்பிக்கை தொடர்பான பணிச்சட்டகத்தின்கீழ் முன்மொழியப்பட்டுள்ள உபமின் நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக 60 மில்லியன் டொலர் முதலீட்டைப் பெற்றுக்கொள்வதற்கும், 10 மில்லியன் டொலர் சர்வதேச அபிவிருத்தி இணை நிறுவனத்தின் அனுசரணை வழங்கும் இடர் காப்பீட்டுப் பிணை வசதியைப் பெற்றுக்கொள்வதற்குரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

# கொழும்பு மாநகரசபைக்காக அரசு மில்லியன் கணக்கில் பேரம்

## மரிக்கார் எம்.பி. கூறுகின்றார்



கொழும்பு, மே 11

கொழும்பு மாநகரசபையின் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் அரசாங்கம் மில்லியன் கணக்கில் பேரம் பேசுகின்றது. திருடர்கள் என்று கூறியவர்களுடன் இவர்கள் எவ்வாறு ஆட்சியமைக்க முடியும்?

இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எ.பி.எஸ்.எம். மரிக்கார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அரசாங்கம் மக்களுக்கு இதுவரை காலமும் தெரிவித்துவந்த பொய்களுக்கு மக்கள் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் பதிலளித்துள்ளனர். நாடாளுமன்றத் தேர்தலில் 68 இலட்சமாக இருந்த வாக்குகளை இந்தத் தேர்தலில் 45 இலட்சம்வரை அரசாங்கம் குறைத்துக்கொண்டுள்ளது.

கொழும்பு மாநகரசபையின் ஆட்சியை அமைப்பதற்கும் அரசாங்கத்துக்கு முடியாமல் இருக்கிறது. தற்போது உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ள மில்லியன் கணக்கில் பேரம் பேசப்பட்டுவருகிறது. அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள எவ்வாறு திருடர்களுடன் ஒன்றிணையமுடியும்?

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியை மேற்கொள்ள வேண்டும் என்ற செய்தியையே மக்கள் வழங்கி இருக்கிறார்கள். அதன்பிரகாரம் நாங்கள் செயற்படத் தயாராக இருக்கிறோம் - என்றார். (எ-இ)

# பொருளாதாரம் சரிவெனக் கூற வெட்கமில்லையா?

## *அரசை சாடுகின்றார் ஹர்ஷ டி சில்வா*

கொழும்பு, மே 11

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் எதிர்வரும் ஆண்டுகளில் வீழ்ச்சியடையும் என்று அரசாங்கம் கூறுகின்றது. இவ்வாறு கூற அரசாங்கத்துக்கு வெட்கம் இல்லையா? என கடுமையாக விமர்சித்துள்ளார் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

2048ஆம் ஆண்டளவில் அபிவிருத்தி நாடாக மாறவேண்டும் என்றால் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி ஆண்டிற்கு 8 தொடக்கம் 9 வீதமாக இருக்கவேண்டும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறினார். அப்போது இலங்கை விரைவாக அபிவிருத்தி அடைந்த நாடாக மாறவேண்டும் என தேசிய மக்கள் சக்தியினர் விமர்சித்திருந்தனர்.

தற்போது இலங்கையின் பொருளாதார வளர்ச்சி வீதம் 3.5 சதவீதத்தால் எதிர்வரும் ஆண்டுகளில் வீழ்ச்சியடையும் என அரசாங்கம் கூறுகின்றது. இவ்வாறு கூற வெட்கமாக இல்லையா? பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்றால் உங்களின் பொருளாதாரத் திட்டங்களை நீங்கள் மாற்றவேண்டும். ஆனால் இந்த அரசாங்கத்திற்கு பொருளாதார மாதிரியை மாற்றினால் எந்தப் பொருளாதாரத்திற்கு செல்வது என்பது தெரியாது - என்றார். (எ-இ)



# அரசாங்கம் தீர்மானித்துள்ள மின்கட்டண உயர்வு என்ன?

## கேள்வி எழுப்புகின்றார் சஜித்

கொழும்பு, மே 11

சர்வதேச நாணயநிதியத்தின் நிபந்தனைகளுக்கமைய மின்சாரக் கட்டணத்தை எந்தளவு அதிகரிப்பதற்குத் தீர்மானித்திருக்கிறது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கையெழுத்திட்ட சர்வதேச நாணயநிதியத்தின் இணக்கப்பாட்டை மாற்றியமைத்து, தாம் ஆட்சிக்கு வந்த பிறகு புதிய நாணயநிதிய இணக்கப்பாட்டை எட்டுவோம் என தற்போதைய அரசாங்கம் தேர்தல் காலத்தில் வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், தற்போது முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கையெழுத்திட்ட அதே நாணயநிதியத்தின் இணக்கப்பாட்டை பின்தொடர்வதால் நாட்டுமக்கள் தற்போது பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

நாணயநிதியத்தின் இணக்கப்பாட்டுக்கமைய அரசாங்கம் தற்போது மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

அவ்வாறு மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டால் மக்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புத் தொடர்பில் அரசாங்கம் மதிப்பீடொன்றை மேற்கொண்டுள்ளதா? பூச்சியம் மின் அலகில் இருந்து 90 அலகுவரை எந்தளவு மின் கட்டணம் அதிகரிக்கப்போகிறது? இந்தத் தகவல்களை அரசாங்கம் வெளிப்படுத்தவேண்டும் -என்றார். (எ-இ)

# நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற வேட்பாளர்

கொழும்பு, மே 11

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் புத்தளம் மாவட்டத்தின் வன்னாத்தவில்லு பிரதேசசபைக்கு வன்னாத்தவில்லு வட்டாரத்தில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவர் நாணயச்சுழற்சியில் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் ஒருவரே இவ்வாறு நாணயச்சுழற்சியில் உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் வன்னாத்தவில்லு பிரதேச சபைக்கு வன்னாத்தவில்லு வட்டாரத்தில் போட்டியிட்ட தேசிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி ஆகிய கட்சிகளின் இரண்டு வேட்பாளர்களும் தலா 320 வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர்.

அதையடுத்து இரண்டு வேட்பாளர்களின் சம்மதத்துடன் அங்கு நாணயச் சுழற்சி இடம்பெற்றது. அதில் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் வெற்றி பெற்றதுடன், உறுப்பினராகவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)

# பாலியல் இலஞ்சம் கோரிய அதிகாரிக்கு கடூழியச்சிறை

கொழும்பு, மே 11

பாலியல் இலஞ்சம் கேட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அரச அதிகாரி ஒருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 20 ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனையை விதித்துள்ளது. 7 வயது பிள்ளையின் சிறுநீரக சத்திர சிகிச்சைக்காக அரசாங்க நிதியுதவி கோரிய தாயிடம் குறித்த அதிகாரி பாலியல் இலஞ்சம் கேட்டதாக குற்றஞ்சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம்
09 . 07 . 1943



மறைவு
11 . 04 . 2025

## எலிசபெத் செல்வராணி ஜோர்ஜ்

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, லண்டனை வதிவிடமாகவும் கொண்ட எலிசபெத் செல்வராணி ஜோர்ஜ் அவர்கள் (11.04.2025) வெள்ளிக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான Annama, Francis தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான Veronica, Herath Mudhiyanselage Appuhamy Alphonis தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற George (Revenue inspector) அவர்களின் அன்பு மனைவியும், Shirani, Nimal ஆகியோரின் அன்புத் தாயாரும் Segar, Anitha ஆகியோரின் அன்பு மாமியாரும், Sehani, Senthan ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், Gavril, Ganix, Galya ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், Razeen அவர்களின் பாசமிகு வளர்ப்பு அம்மம்மாவும், காலஞ்சென்றவர்களான Eugine(Pharmacist), Pricila(Librarian), Indrani, Selvarajah(Retired Printing Press Officer) மற்றும் Yogarajah (Retired Principal) ஆகியோரின் அன்புச் சகோதரியும், Magdaline (Retired Teacher), காலஞ்சென்றவர்களான Josephine, Mark(Artist), Edward(Deputy Land Commissioner), Nelson(Former Airforce Officer) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனைகள் நேற்று முன்தினம் (09.05.2025) வெள்ளிக்கிழமை இலண்டனில் இடம்பெற்ற நிலையில் அன்னாரின் அஸ்தி அடங்கிய கலசம் மன்னார் பொது சேமக்காலையில் எதிர்வரும் (31.05.2025) சனிக்கிழமை நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
திருமதி ஷிராணி சேகர் (மகள் - லண்டன்) - +44 7477 788558
திரு ஜோர்ஜ் ஜெரால்ட் நிமால் (மகன் - லண்டன்) - +44 7531028156
திரு எட்வேட் டிலிஷான் (பெறாமகன் - இலங்கை) - 077 171 2043

(CS 58185) E-1

# இந்தியா - பாகிஸ்தான் போர் நேற்றுடன் முடிவுக்கு வந்தது!

## அமெரிக்கத் தலையீடே காரணம்

வொஷிங்டன், மே 11

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் கடந்த நான்கு நாள்களாக இடம் பெற்றுவந்த மோதல், நேற்று மாலை 5 மணியுடன் முற்றாக முடிவுக்கு வந்து எல்லையில் அமைதி திரும்பியுள்ளது.

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள், இந்தியா மற்றும் பாகிஸ்தான் அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினமும் நேற்றும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வந்தனர். இதன் தொடர்ச்சியாகவே, இரண்டு நாடுகளும் போரை உடனடியாகக் கைவிட்டு எல்லையில் அமைதியை ஏற்படுத்துவதற்குச் சம்மதித்துள்ளன.

இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போர் முடிவுக்கு வருவதை இரண்டு நாடுகளின் அரசாங்கங்களும் ஒப்புக்கொண்டுள்ளன. அத்துடன், தமது கோரிக்கையை ஏற்றுப் போரை நிறுத்தியமைக்காக அமெரிக்க அதிபர் ட்ரம்பும் இரண்டு நாடுகளுக்கும் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார். இந்தியா, பாகிஸ்தான் உயர்மட்ட அதிகாரிகள் புத்திசாலித்தனமான முடிவை எடுத்துள்ளனர் என்றும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்தப் போர் நிறுத்தத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக பாகிஸ்தானும், நிபந்தனையுடனான ஆதரவை வழங்குவதாக இந்தியாவும் கூறியுள்ளன. எனினும், இந்தியா எவ்வாறான நிபந்தனைகளை முன்வைத்தது என்று குறிப்பிடப்படவில்லை. பஹல்காம் தாக்குதல்தாரிகளை ஒப்படைக்குமாறு இந்தியா கோரியிருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது.

(ம)

## தொலைந்துவிட்டது



13.04.2025 அன்றிலிருந்து வைற்றி எனும் பெயருடைய எமது செல்லப்பிராணியான நாய் சங்கானையில் தொலைந்து விட்டது. தகவல் அறிந்தோர் தொடர்பு கொள்ளவும்

சன்மானம் வழங்கப்படும்

தொடர்பு: 076 108 3300

# மரண அறிவித்தல்



## பரிமளம் விநாசித்தம்பி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 67 வெங்கடேஸ்வரர் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட பரிமளம் விநாசித்தம்பி அவர்கள் 07.05.2025 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விநாசித்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா இராமாசிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், நல்லம்மா, மங்கையற்கரசி, நாகேஸ் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நல்லதம்பி, மயில்வாகனம், நாகரத்தினம், கதிரவேலு ஆகியோரின் மைத்துனியும், அமிர்தம், சரசமலர், திருமேனி, குணலட்சுமி, ஆகியோரின் சகலியும், ஏரம்பமூர்த்தி, உலகநாதன், பத்மாவதி, திலகவதி, தர்மராஜா, இரத்தினேஸ்வரி, அமலேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, குணபூசனம், நாகராசா, குணரத்தினம், திலகேஸ்வரி, காலஞ்சென்ற சிவஞானசோதி, சிவராமலிங்கம், சிவபாலன் ஆகியோரின் மாமியாரும், புனிதா, காலஞ்சென்ற சுனிதா, காலஞ்சென்ற காந்தன், பகீதரன், பரணீதரன், சுஜி, பத்மரூபி, அனுசியா, சதீஸ்வரன், தட்ஷாயினி, தர்ஷிகா, தபினா, தினுஜன், தனேசிகா, சங்கீதா, சரண்யா, சுரேகா, சுகன்யா, சுகுனா, சுரேஸ், சிந்துசன், சுதர்ஷன், கௌசிகன் ஆகியோரின் பேர்த்தியும் நிலானி, நிஷானி, நிராஜ், உபாஸ், அபினாஸ், ஹாரிணி, அமீரா, அத்விக், கபிநாத், கர்ஷிகா, தமிழினி, கியான் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் காலை 8.00 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தாயின் மடியில்
08.01.1933

இறைவன் அடியில்
07.05.2025

தகவல்:
குடும்பத்தினர்
075 208 7350




# தாமரைக்கோபுரத்தில் டிஜிற்றல் அலங்காரம்



கொழும்பு, மே 11

இம்முறை வெசாக் பண்டிகையை முன்னிட்டு கொழும்பு தாமரைக் கோபுரத்தில் மக்களைக் கவரும் வகையில் அதிநவீன டிஜிற்றல் அலங்காரங்கள் செய்யப்படவுள்ளனவெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வெசாக் பண்டிகையின் முக்கியத்துவத்தை உணர்த்தும்வகையில், கோபுரத்தில் டிஜிற்றல் தோரணங்கள், பௌத்த இதிகாசங்களை சித்தரிக்கும் திரை அலங்காரங்கள், நியோன் மின்விளக்குகள், மற்றும் தரைக்கட்டமைப்பு மின் விளக்குகள் என பன்முகக் கலையமைப்புகள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# முதல்வாரத்தில் 33,910 சுற்றுலாவிகள்

கொழும்பு, மே 11

மே மாதத்தின் முதல் வாரத்தில் 33,910 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைதந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்தியா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பங்களாதேஷ் மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்த பெரும்பாலான சுற்றுலாப்பயணிகள் வருகைதந்துள்ளனர்.

இதேவேளை இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டிற்கு வருகைதந்துள்ள மொத்த சுற்றுலாப்பயணிகளின் வருகை 930,794 ஐ எட்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# குடும்பத்தலைவர் சடலமாக மீட்பு!

யாழ்ப்பாணம், மே 11

பருத்தித்துறை – சுப்பர்மடம் பகுதியில், குடும்பத்தலைவர் ஒருவர் உறக்கத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதன் யோகராசா மனோஜ் (வயது 30) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இறப்புக்கான காரணம் தெரியவராத நிலையில், அவருடைய மாதிரிகள் பெறப்பட்டு அவை மேலதிக ஆய்வுக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. இறப்பு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-26)

## வாகன சாரதி தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனமொன்றுக்கு 40 வயதுக்கு மேற்பட்ட வாகன சாரதி தேவை.

தேவையேற்படின் தங்குமிட வசதியும், உணவும் வழங்கப்படும்.



**அனுபவத்துக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.**

தொடர்பு:- 077 120 9992

# அரச வாகனங்கள் இரண்டாம்கட்ட ஏலம்

கொழும்பு, மே 11

ஜனாதிபதி அலுவலகத்தின் அதி சொகுசு வாகன ஏலத்தின் இரண்டாம் கட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதி அலுவலகத்துக்கு 27 சொகுசு வாகனங்கள் மற்றும் பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்வதற்கான இரண்டாம் கட்டத்தின் கீழ் விலைமனுக் கோரப்பட்டுள்ளது.

விற்பனைக்குள்ள வாகனங்களில் 1991 முதல் 2016 வரை பல்வேறு ஆண்டுகளில் தயாரிக்கப்பட்ட வாகனங்கள் இதில் அடங்குவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது. மே 14 ஆம் திகதி வரை, இலக்கம் 93 ,ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுசல நிறுவன வளாகத்தில் இந்த வாகனங்களை பரீட்சிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

# அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்த கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துக

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மே 11

தனியார் துறையினர் இலாபத்தை மாத்திரமே அடிப்படையாகக் கொண்டு செயற்படுவர். ஆனால் கூட்டுறவுத்துறையானது சேவையை அடிப்படையாகக் கொண்டு சிறியதொரு இலாபத்துடன் மாத்திரமே செயற்படும். அதனால் கூட்டுறவுத்துறையை வலுப்படுத்துவதன் ஊடாக அரிசி மாபியாவை எதிர்காலத்திலாவது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியும் என்று இவ்வாறு வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்..

தந்தை செல்வா அரங்கில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற இளம் கூட்டுறவாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரிசி மாபியாவைக் கட்டுப்படுத்துவதற்காக, கூட்டுறவு அபிவிருத்தி வங்கி ஊடாக நெல் கொள்வனவுக்கு நாம் கடன்களை வழங்குகின்றோம். நெல்லுக்கான நிர்ணய விலையை விட கூடுதலான விலைக்கு விவசாயிகளிடமிருந்து வேறு மாகாண தனியார் அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லைக் கொள்வனவு செய்கின்றார்கள். விவசாயிகளும் தமக்கு கூடுதலான இலாபம் கிடைக்கின்றது என விற்பனை செய்கின்றார்கள்.

அவர்கள் இவ்வாறு கொள்வனவு செய்யும் நெல்லை பதுக்கி வைத்திருந்து, அரிசிக்கான விலையை தீர்மானிப்பவர்களாக மாறுகின்றார்கள். தனியார் அரசியின் விலையை தீர்மானிப்பதை மாற்றியமைப்பதற்கு எமது கூட்டுறவு அமைப்புக்களை வலுப்படுத்த வேண்டும். எங்கள் விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்து சிறியதொரு இலாபத்துடன் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக சந்தை விலையை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்யும்போது மக்கள் பயனடைவார்கள் -என்றார். (ச-25, 113)

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 18 . 12 . 1943



ஆண்டவன் அடியில் 09 . 05 . 2025

### பரமசாமி மயில்வாகனம்

மத்தியவீதி, மீசாலை கிழக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் மீசாலை, துனுக்காய் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் தற்போது லண்டனில் வசித்தவருமாகிய பரமசாமி மயில்வாகனம் அவர்கள் நேற்று முன்தினம் (09.05.2025) வெள்ளிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் மீசாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பரமசாமி-மங்கையற்கரசி தம்பதியரின் அன்பு மகனும் துனுக்காயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் (முன்னாள் கிராம சேவையாளர்)-பார்வதிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும் பாக்கியலட்சுமி (லண்டன்) அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சந்திரசேகரம் (துன்னாலை), தனபாலசிங்கம் (துனுக்காய்) மற்றும் விஜயலட்சுமி (மீசாலை), விஜயரட்ணம் (நோர்வே), யோகநாதன் (பதிஜவாளர்-துனுக்காய்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் சரவணவன் (நோர்வே), கிரிதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தனராணி (நோர்வே), அனுஷியா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜொனதன், கெவின், யூலியா (நோர்வே), பிரவீன், நவ்யா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

சகோதரி-த.விஜயலட்சுமி

மைத்துனர்-செ.தங்கவடிவேல்

077 344 4489

021 227 0478

மத்திய வீதி,
மீசாலை கிழக்கு,
மீசாலை.

## மரண அறிவித்தல்

மலர்வு 16 . 04 . 1957



மறைவு 08 . 05 . 2025

### பொன்னையா நாகேஸ்வரா

கொடிகுளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா நாகேஸ்வரா அவர்கள் கடந்த (08.05.2025) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் கொடிகுளாயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னையா-சிவகாமசுந்தரி தம்பதியின் அன்பு மகனும், இராசேந்திரம்-செல்லப்பாக்கியம் தம்பதியின் மருமகனும், ஜெயதேவி அவர்களின் அன்பு கணவரும், மைனாவதி, காலஞ்சென்றவர்களான அமராவதி, யோகராசா, கமலாதேவி, வனிதாதேவி மற்றும் பிறமலதா, ரவிச்சந்திரன், ரகுநேசன்,நிர்மலாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற பாலமனோகரன் மற்றும் ஜெயமலர், ஜெயலலிதா, ஜெயரஞ்சன், ஜெயருஞ்சனா, ஜெயசந்தன், ஜெயசுதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் அழுதகாசன், காலஞ்சென்ற அமுதசுமனா மற்றும் அருள்தாசன், அருள்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் யோகரதி, சர்மினி, சங்கீத்தா ஆகியோரின் மாமனாரும் அன்பினி, அறிவினி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் உடுத்துறை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 09 . 1982



மறைவு 07 . 05 . 2025

### பாலசிங்கம் ஜெகாஸ்

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் ஜெகாஸ் அவர்கள் கடந்த (07.05.2025) பதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் பாலசிங்கம்-நடேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், கேதீஸ்வரன்-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கிருஷ்னவேணி அவர்களின் அன்பு கணவரும், பிருந்தவியின் பாசமிகு தந்தையும் பிரகாஸ் (ஜேர்மன்), ஜனா ஆகியேரின் சகோதரனும் ஷோபனாவின் மைத்துனரும் அவினாஷ், இலக்யா ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.05.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும்

**காளி கோவிலடி,**
**ஏழாலை மத்தி,**
**ஏழாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 335 0049**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 15 . 01 . 1962



மறைவு 08 . 05 . 2025

### தம்பிராசா அம்பலவாணர்

**(ஓய்வு நிலை அதிபர் யா/ மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி)**

எமது மைத்துனர் பீதாம்பரம் அவர்களின் சகோதரனாகிய (அண்ணன்) தம்பிராசா அம்பலவாணர் அவர்களின் திடீர் மறைவு செய்தி கேட்டு ஆழ்ந்த கவலை அடைவதோடு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல அம்பலவாணர் வீரகத்தி விநாயகரை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி

**சாரங்கா நகைமாடம்**
**உரிமையாளரும் ஊழியர்களும்**
**பஞ்சாட்சரம் குடும்பத்தினர்.**

YARL ROYAL PALACE : யாழ்ப்பாணத்தின் மிக உயர்ந்த மற்றும் பிரமாண்டமான முகவரியில் இலகுவான வாழ்வின் புதிய தரத்தை அமைக்கிறது

யாழ்ப்பாணம், இலங்கை – Tilko Hotels மற்றும் Blue Ocean குழுமம் ஆகிய இரு முக்கிய நிறுவனங்களின் முன்னோடியான கூட்டணியில், Tilko Blue Ocean Holdings (Pvt) Ltd. பெருமையுடன் அறிமுகம் செய்கிறது – YARL ROYAL PALACE. இது வட மாகாணத்தில் உள்ள மிக உயரமான அடுக்குமாடி குடியிருப்பு வளாகமாக மாற இருக்கும் வரலாற்றுச் சிறப்பு மிக்க வட்டாரத்தில் அமைந்துள்ள ஒரு சிறப்பு திட்டமாகும்.

யாழ்ப்பாணம் கண்டி வீதியில், இல. 107, என்று வரையறுக்கப்பட்ட இடத்தில், பழைய பூங்கா நேர் எதிரே பெருமைமிக்க காட்சிகளைத் தரும் வகையில் அமைந்துள்ள இந்த வளாகம், யாழ்ப்பாண நகரத்தின் நகரமயமாக்கலில் ஒரு புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

YARL ROYAL PALACE என்பது வெறும் குடியிருப்பாக மட்டும் அல்ல் இது கலைநயமும், கலாசார ஒற்றுமையும், நவீன நகர சூழலிலும் மிகச் சிறந்த நிர்மாண நுட்பத்துடனும் கூடிய ஓர் அடையாளமாக அமைந்துள்ளது. 12 மாடிகளைக் கொண்ட இந்த குடியிருப்பு வளாகத்தில் 72 நுட்பமாக வடிவமைக்கப்பட்ட வீடுகள் உள்ளன, அவை ஒன்று, இரண்டு மற்றும் மூன்று அறைகள் கொண்ட வீட்டு வகைகளாக உள்ளன. 6 நிலைகளைக் கொண்ட பாதுகாப்பான வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் இன்றைய நுண்ணறிவுடைய வீட்டு வசதி முதலீட்டாளர்களுக்கான அனைத்துச் சலுகைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மக்களாலும், முதலீட்டாளர்களாலும் விரும்பப்படும் இடத்தில் அமைந்துள்ள இந்த அபிவிருத்தி திட்டம், அரச நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், கலாசார நினைவிடங்கள் மற்றும் போக்குவரத்து வசதிகள் என அனைத்திற்கும் நெருக்கமாக இருப்பதால், வசதியும், மதிப்புமிக்க இடமும் ஆகிறது.

தற்காலிகமாக நகர அமைப்பை மாற்றும் ஒரு கட்டிடமாக மட்டுமல்லாமல், YARL ROYAL PALACE என்பது யாழின் பாரம்பரியத்தை மரியாதையுடன் காக்கும் கலாசார மையமாகவும், உலகத் தமிழர்களை தங்களது வேர்களுடன் மீண்டும் இணைக்கும் ஊக்குவிப்பாகவும் அமைந்துள்ளது.

தற்போது இந்த திட்டம் முக்கிய கட்டத்தை கடந்து அடித்தள பணிகள் வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளன, இது Blue Ocean குழுமத்துக்கே உரிய மேம்பட்ட பொறியியல் தரங்களை வெளிப்படுத்துகிறது.

யாழ்ப்பாண நகரானது, வர்த்தகம், கலாசாரம் மற்றும் புதிய முயற்சிகளுக்கான மையமாக விரைவாக உருவெடுத்துவரும் இந்த காலகட்டத்தில், YARL ROYAL PALACE என்பது பிரமிப்பும், முன்னேற்றமும், புது வாய்ப்புகளும் நிரம்பிய ஒரு அடையாளமாக திகழ்கிறது – இலங்கையின் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றில் உங்கள் சொந்த அங்கீகார வசதியை பெற்றுக்கொள்ள ஒரு அபூர்வ வாய்ப்பாகும்.

மேலதிக தொடர்புகளுக்கு.

திரு. துமிலன் - +94773028400 (இலங்கை)
திரு. திலகர் - +94777696443 (இலங்கை)
திரு. பவித்ரன் - +94777121916 (இலங்கை)
திரு. கண்ணன் - +447960969684 (UK)

(CS 3140) D"

## மரண அறிவித்தல்

மலர்வு 05 . 09 . 1972



இறப்பு 10 . 05 . 2025

### கிரிதரன் தேன்மொழி

**(ஆசிரியர், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலை)**

**புங்குடுதீவு 6ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், ஆடியபாதம், திருநெல்வேலியை நிரந்தரவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. தேன்மொழி கிரிதரன் 10.05.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு கிருஷ்ணன், நாகபூசணி கிருஷ்ணன் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சற்குணதேவியின் அன்பு மருமகளும், ஆறுமுகம் கிரிதரனின் (கணக்காளர், கோப்பாய் பிரதேச செயலகம்) அவர்களின் அன்பு மனைவியும், அனுசாகர் ( IT - மொரட்டுவ பல்கலைக்கழகம்), சைந்தவி (யா/வேம்படி மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தாயாரும்,அமரர் பகீரதன், Dr. ஸ்ரீபாஸ்கரன் (இரத்தவங்கி தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச்சகோதரியும், முகுந்தன் (ஜேர்மனி), கோகுலன் (ஜேர்மனி), Dr. யதர்சினி (யாழ் போதனாவைத்தியசாலை, பல் வைத்திய பிரிவு) ஆகியோரின் மைத்துனியும், சிவாஜினி, அமிர்தினியின் உடன்பிறவாச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.05.2025 திங்கட்கிழமை பகல் 10:00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்து செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 033 2647**

(CS3149) D'

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் சுதுமலையில் 5 பரப்புக் காணியும், வீடும் நல்லசுற்றாடலில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 071 838 1119

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் உடன் தேவை.

- தச்சு வேலையாட்கள்-(90 000/=)
- பெயின்டர் (தளபாடம்-(75 000/=)
- மேற்பார்வையாளர்-(35 000/=)
- வேலைபழக விரும்புபவர்-(25 000/=)

நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு:
ஆர்க் தளபாட நிலையம்
இல-35, கொட்டைக்காடு வீதி,
கோண்டாவில் கிழக்கு,
(பஸ்தரிப்பிடம் அருகாமையில்)

தொடர்புகளுக்கு: 021 221 9909, 077 300 1763

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

கடற்கரை வீதி கொழும்புத்துறையில் அமைந்துள்ள புதிய கட்டுமான வேலைத்தளம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

தொடர்புகளுக்கு:
077 003 2657, 077 614 1645

## கடை வாடகைக்கு தேவை

யாழ் நகரை அண்டிய 3km சுற்றுவட்டாரத்தில் வீதியோரக் கடை தேவை. இலத்திரனியல் உபகரணங்கள் திருத்துவதற்கு.

தொடர்பு: 074 089 1995

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
செல்வி இ.சிந்துயா அவர்களின்
தந்தையார்
**இராசையா இரவீந்திரநாதன்**
அவர்கள் காலமானார்.
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 08.10.1964 — மறைவு 09.05.2025

ஆசிரியர் நட்புறவுக்கழகம்
மானிப்பாய் இந்துக்கல்லூரி

# விசேட சுற்றிவளைப்பு 359 பேர் கைது

கொழும்பு, மே 11

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது போதைப்பொருட்களுடன் 359 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹெரோய்ன் போதைப்பொருளுடன் 129 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 133 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 94 பேரும், கஞ்சா செடிகளுடன் 03 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 166 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், 176 கிராம் 446 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும், 04 கிலோ 142 கிராம் 135 மில்லிகிராம் கஞ்சா போதைப்பொருளும், 12534 கஞ்சா செடிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

## ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானம்



நாளை (12.05.2025) திங்கட் கிழமை காலை 9.00 மணிக்கு மகா சமாதி நிலையடைந்த நல்லை ஆதின குருமுதல்வர் சோமசுந்தர - பரமாச்சார்ய சுவாமிகள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையுடன், விசேட தேவைக்குட்பட்டோருக்கான உதவித் திட்டங்கள் வழங்குதல், வறியமாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் வழங்குதல் என்பனவும் இடம்பெற்று அன்னதானத்துடன் நிறைவு பெறும் என்பதனை அறியத் தருகின்றேம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூசணி
அம்பாள் தேவஸ்தானம்

(CS/58211) D"

## A/L இணைந்தகணிதம்

A/L 2025 மாணவர்களுக்கான வினா விடை வகுப்புக்கள் மற்றும் A/L 2026, A/L 2027 வகுப்புக்கள் வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்பு:
0778324002

(CS/58209) D"

## மணமகன், மணமகள் தேவை

1991 இல் பிறந்த 7 இல் சூரியன், செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

1994 இல் பிறந்த மணமகளுக்கு மணமகன் தேவை

தொடர்பு: 074 123 1191

## வீடு வாடகைக்கு தேவை

மூன்று பேர் கொண்ட கௌரவ குடும்பத்திற்கு யாழ்ப்பாணம், கோப்பாய், கைதடியில் வீடு வாடகைக்கு தேவை.

தொடர்பு: 077 083 1310

## வீடு வாடகைக்கு

யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனம், காரியாலயம் போன்றவற்றிற்கு மிகவும் பொருத்தமான இடம் வாகனங்கள் நிறுத்தக்கூடிய இடவசதி உண்டு. பல்கலைக்கழகம், எரிபொருள் நிலையம், வணிக நிறுவனங்கள் சூழ்ந்த முக்கியமான பகுதி வாடகை நேரில் தீர்மானிக்கப்படும். பார்வையிடும் நேரம் A.m 9.30 - 11.30, 3.30 - 5.30 P.m

தொடர்புகளுக்கு
0777805950

## வேலை வாய்ப்பு

யாழில் இயங்கும் பலசரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்டு கீழ் காணும் ஆட்கள் தேவை.

- Computer Billing + Cashier
- Administration
- Sales Assistant (உதவியாளர்)
- Packaging (பொதியிடல்)

வயது எல்லை 18-40

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:
077 419 5209

## விற்பனைக்குண்டு

சிறுப்பிட்டி, பருத்தித்துறை வீதியில் பெற்றோல் செற்றுக்கு அருகில் உள்ள ஒழுங்கையில் வலது பக்கம் மூன்றாவதாக உள்ள 2 1/2 பரப்பு காணி (கிணறு, வீட்டுக்கு அத்திவாரம் இடப்பட்டநிலையில்) விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 610 9910

(CS/31421) D"

## காணி விற்பனைக்கு

மூளாய் தேவாலய வீதியில் (பாடசாலை ஒழுங்கையில்) மூளாய் வீதியில் இருந்து 100 யார் தூரத்தில் 3 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
077 111 7796, 011 250 2129

(CR/4498) J-1



உ
சிவமயம்

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 28ஆம் நாள் (11.05.2025) ஞாயிற்றுக்கிழமை சுக்லபட்சமும், சதுர்த்தி திதியும், சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 09.30 மணி முதல் 11.00 மணிவரை வரும் மிதுன லக்கினத்தில் எமது ஏக புத்திரி திருநிறைச் செல்வி

**கங்கேஸ்வரன் சுகநிதி**

அவர்களுக்கு இறைவன் திருவருள் துணைகொண்டு இல. 82, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி **சிவகாமி மஹால்** மண்டபத்தில் பூப்புனித மஞ்சள் நீராட்டு விழா நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.



82/32, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு. திருமதி கங்கேஸ்வரன், சுபாசினி
குடும்பத்தினர்.
தொ.பே. இல : 0774823624

(CS/58207) J-1

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம் விளாத்தி அடி வீதி, உரும்பிராய் கிராமம் உரும்பிராய் வடக்கு J/164 கோப்பாய் Ds பிரிவில் 4 பரப்பு 16.69 குளி, வெற்றுக் காணி, பயிர்செய்கைக்கும் வீடு கட்டுவதற்கும் ஏற்றது. உறுதி பிரக்கராசியுடன்

தொடர்புகளுக்கு:
திரு.ஆதித்தன்:
077 616 9254 (வட்ஸ் அப்)
டாக்டர் அரஸ்:
+44 794 141 9205(வட்ஸ் அப்)
திரு.டினேஸ்:
+94 77 087 0837 (வட்ஸ் அப்)

THE HALO TRUST

HALO Global Procurement Guidelines v3
P3.1. Tender Advertisement

## TENDER ADVERTISEMENT - INVITATION TO TENDER

Date: 11/05/2025
Tender for Annual Fuel Supply
Reference No: PSA36581

The HALO Trust invites sealed bids from qualified and experienced suppliers for the provision of the following fuel types for a period of one (1) year:

**Fuel/Service Category:**

- Diesel
- Petrol
- Kerosene
- Super Diesel

**Annual Estimated Requirements (in Litres):**

- Diesel: 600,000 L
- Petrol: 18,000 L
- Kerosene: 32,400 L
- Super Diesel: 86,400 L

Interested bidders may obtain the bidding documents from the following address:

**The HALO Trust**
No. 450, Thirunagar West,
Kilinochchi, Sri Lanka

**The HALO Trust**
Kokkuthoduvai
Mullaitivu

Alternatively, bidders may request an electronic copy by emailing: **logistics@halosrilanka.org**

**Submission Deadline:**
All completed bids must be submitted on or before 31.05.2025 at 16:00 hrs (either as a sealed hard copy or electronically).

Note: Late submissions will not be accepted.
For any inquiries, please contact us at the above email address.
ENDS

## Jaffna College - Vaddukoddai Vacancies

Jaffna College is a prestigious and long standing private school in Vaddukoddai, Sri Lanka. The school is looking for energetic, self-motivated and hard-working individuals to join the staff team for the following position.

**Primary school teacher**
**Requirements:**

1. Degree from a recognized university
2. Age below 40
3. Primary education training and/or teaching experience at a school will be an added advantage.

Closing date for applications 23.05.2025
Applications with the names of two non-related referees should be sent to **hr@jaffnacollege.lk**
**Only short listed candidates will be called for an interview.**
**Principal**

## தூய்மைப்படுத்தல்

*யாழ்., மே 11*
*சுழிபுரம் திருவடி நிலையில், நிமிர்வு சமூக மேம்பாட்டு அமையத்தின் ஏற்பாட்டில், சிரமதான நிகழ்வொன்று இன்று மாலை 3 மணிமுதல் இடம்பெறவுள்ளது.*
*(ம-125)*

## மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையின் தமிழ்ப்பாட ஆசிரியர்
திருமதி. **மாலதி கந்தையா**
B.A, PGDE, MEd, SLTS - I

Best Wishes

**சேவை விபரம்.**

- யா / எழுதுமட்டுவாழ் ஸ்ரீகணேசா வித்தியாலயம் 15.07.1998 - 12.02.2008
- யா / தேவரையாளி இந்துக் கல்லூரி 13.02.2008 - 31.12.2008
- யா / வேலாயுதம் மகா வித்தியாலயம் 01.01.2009 - 01.01.2017
- யா / விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம். 02.01.2017 - 11.05.2025

எமது பாடசாலையில் தமிழ்ப்பாட ஆசிரியராகக் கடமையாற்றி இன்று 11.05.2025 ஞாயிற்றுக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் ஆசிரியர் **திருமதி. மாலதி கந்தையா** அவர்களுக்கு எமது மணிவிழா வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

Congratulations

வாழ்த்துவோர்: **ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா / விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்.**

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு
## டவர் மண்டப அரங்க மன்றம்

நாடகமும் அரங்கக்கலைகளுக்குமான பாடநெறி -2025/2026
கல்வி வருடத்திற்காக மாணவர்களை உள்வாங்குதல்
(நாடக அரங்கியற் கல்விமாணிக் கற்கை நெறிக்கு
இட்டுச் செல்லக்கூடிய இரு வருட முழு நேர பாடநெறி.

**தகைமைகள்**

- க.பொ.த (சா.த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு தமிழ், கணிதம், ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் கட்டாயம் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மேலும் க.பொ.த (உ.த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு ஒரே தடவையில்(03) பாடங்களிலும் ஏதாவது ஒரு பிரிவில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- திருமணமாகாத 19-23 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

**ஆட்சேர்ப்பு முறை**

- விண்ணப்பிக்கும் அனைவரும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். டவர் மண்டப அரங்க மன்றத்தினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வின் மூலம் புள்ளிகளின் அடிப்படையில் சிறந்த தகுதியான 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**பாடநெறிக்கட்டணம்**

பாடநெறிக்கான ஆரம்பப் பதிவுக் கட்டணம் 50000.00 மிகுதிப் பணம் 04 தவணைகளின் அடிப்படையில் செலுத்தலாம். இது (37500.00x4)தவணைப் பரீட்சைக்கு முன்பதாக செலுத்த வேண்டும்.

விண்ணப்பப்படிவம் சம்பந்தமான தகவல்களை எமது இணையத்தளத்தில் பார்வையிடலாம் **www.towerhall.lk**

விண்ணப்பக் கட்டணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக - **ஹயிற்பார்க் (Bank of Ceylon - Hyde Park) இலங்கை வங்கிக் கிளை கணக்கு இலக்கம் 2327541, டவர் மண்டப அரங்க மன்றம்** - என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பப் படிவங்களும் ஜீன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத் தபாலில் **பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் **"நாடக அரங்கியல் உயர் டிப்ளோமா பாடநெறி-2025 தமிழ்மொழி"** எனக் குறிப்பிடல் வேண்டும். மேலதிக தொடர்புகளுக்கு பிரதிப்பணிப்பாளர் தமிழ் நாடக அபிவிருத்திப் பிரிவு கலாநிதி சண்முகசர்மா ஜெயப்பிரகாஷ்உடன் தொடர்பு கொள்ளவும் 0777911425.

**கலாநிதி டி.எம்.எஸ் திஸாநாயக்க,**
**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்.**
**சவ்சிறிபாய, 123, விஜேராம மாவத்தை கொழும்பு - 07**
**E-mail -towersl@sltnet.lk**

## நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
## Regd no J/1564 Of 30.03.1971
## ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி
## பதவி வெற்றிடம்.

**1. பதவி - பொதுமுகாமையாளர் - 101/07**

சம்பள அளவுத் திட்டம் - 21125 - 275 x 10 - 300 x 10 - 26875
253500 - 3300 x 10 - 3600 x 10 - 322500

**அங்கீகரிக்கப்பட்ட தகமைகள்**

அ. கூட்டுறவு ஊழியர் 08வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டுகால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 09வது சம்பளத்திட்டப் பதவியில் முகாமை நிலை / மேற்பார்வை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டுகால அனுபவம்.

**அல்லது**

ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டம் / அதற்குச்சமனான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் / வியாபாரப்புள்ளி விபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். /
இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி

**அல்லது**

இ. கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவன மொன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டு கால அனுபவம் /
க.பொ.த உயர் தரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**ஏனைய விபரங்கள்**

01. மேற்குறிப்பிட்ட பதவிக்கான சம்பள திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவின் 02/2022 சுற்று நிரூபத்திற்கு அமைவானது.
02. வயதெல்லை 18 - 45 (சங்கப் பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தற்றது.)
03. இப் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தை விட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்று நிரூபத்திற்கு அமைய இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
04. குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
05. ஏற்கனவே கூட்டுறவுச் சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
06. தகமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியால யத்தில் ரூபா 100.00 இனை செலுத்தி பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின் பிரதிகளும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பதவிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு "தலைவர், நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஆடியபாதம் வீதி திருநெல்வேலி எனும் முகவரிக்கு 26.05.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்**
**நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.**
தொ.இல : 0212222143

(CR/44970) J-1

பாகிஸ்தானுக்கு

# உயிர்காக்கும் மருந்துகள் ஏற்றுமதியை நிறுத்திய தமிழகம்

கொழும்பு, மே 11

தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு மருந்து ஏற்றுமதி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள் ளன.

பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பெற்று வரும் அனைத்து நலன்களையும், சலுகைகளையும் தடை செய்ய மத்திய அரசு தீர்மானித்தது.

இந்தியாவின் மருந்து சந்தை மிகப்பெரியது. உலக அளவில் உற்பத்தியாகும் மருந்துகளில் 60 சதவீத பங்களிப்பை இந்தியா கொண்டுள்ளது.

உள்நாட்டு பயன்பாட்டுக்கு மாத்திரமின்றி அமெரிக்கா, பிரித்தானியா, தென்னாப்பிரிக்கா, நெதர்லாந்து, பாகிஸ்தான் உட்பட பல்வேறு நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து மருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

குறிப்பாக, 'ஜெனரிக்' எனப்படும் மூலப்பெயரிலான மருந்துகள் மற்றும் அதற்கான மூலப்பொருள்கள் ஏற்றுமதியில் இந்தியா முன்னிலை வகிக்கிறது. வருடந்தோறும் 2.40 லட்சம் கோடி ரூபா மதிப்பிலான மருந்துகள் உலக நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து அனுப்பப்படுகின்றன.

அந்த வகையில் பாகிஸ்தானுக்கு உயிர் காக்கும் சில முக்கிய மருந்துகளுக்கான மூலப்பொருள்கள் இங்கிருந்து அனுப்பப்படுகின்றன. அதன் வர்த்தக மதிப்பு 100 கோடி ரூபா வரையுள்ளது.

மத்திய அரசின் அறிவுறுத்தலின்படியும், தேச நலனைக் கருத்திற் கொண்டும் பாகிஸ்தானுக்கு மருந்து மற்றும் மூலப்பொருள் ஏற்றுமதியை நிறுத்தியுள்ளோம் என்று தமிழ்நாடு மருந்து உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

## முள்ளிவாய்க்கால்...

இலங்கையில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இடம்பெற்றுவந்த உள்நாட்டுப்போர், கடந்த 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதுடன் முடிவுக்குவந்தது. இந்தப் போரின் இறுதிக் காலங்களில் மிகக்கொடூரமான இனப்படுகொலைக்கு தமிழினம் உள்ளாக்கப்பட்டது. ஒட்டுமொத்த உலகின் மனச்சாட்சியையும், கள்ளமௌனத்தின் பிரதிபலிப்பையும் வெளிப்படுத்திய அந்த இனப்படுகொலைகள் இடம்பெற்று இந்த வருடத்துடன் 16ஆவது ஆண்டு நிறைவுபெறுகின்றது.

முள்ளிவாய்க்காலில் மிகமோசமாக மனிதப் படுகொலை இடம்பெற்ற காலப்பகுதியான, மே மாதம் 11ஆம் திகதிமுதல் மே மாதம் 18ஆம் திகதிவரையான காலப்பகுதியை இனப்படுகொலை வாரமாக தமிழர்கள் கடைப்பிடித்துவருகின்றனர். இதன்போது, தமிழர் தாயகத்தில் பரவலாக முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்படும். அத்துடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், ஆலயங்கள், கோவில்கள், சிவில் சமூக அமைப்புகள் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அஞ்சலி நிகழ்வுகளும் முன்னெடுக்கப்படும்.

இதன் தொடர்சியான முள்ளிவாய்க்கால் முற்றத்தில் மே மாதம் 18ஆம் திகதி அஞ்சலி நிகழ்வுகள் மிகப்பெரியளவில் நடத்தப்படும். பல்லாயிரம் மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்துவார்கள். இந்த நிகழ்வுகள் அனைத்தும் இம்முறையும் இடம்பெறவுள்ளதுடன், புலம்பெயர் தேசங்களிலும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (அ-ம)

## குருந்தூர்மலை...

விகாரையின் விகாராதிபதியான கல்கமுவ சாந்தபோதி தேரர், தொல்லியல் திணைக்களத்தினரின் ஆகியோரின் முறைப்பாட்டுக்கு அமையவே, அந்த மூவரும் பொலி ஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொல்லியல் பகுதிக்குள் தாம் எந்த அத்துமீறலிலும் ஈடுபடவில்லை என்றும், தமது நிலத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டதாகவும் அவர்கள் முறையான விளக்கத்தை வழங்கிய போதிலும், அந்த விளக்கங்களை பொலிஸார் கண்டுகொள்ளவில்லை என்று சம்பவத்தின் போது உடனிருந்தவர்கள் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர். (அ-ம-26-110)

## மீண்டும்...

உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - குருந்தூர்மலையில் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மூன்று தமிழ் விவசாயிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேற்றிரவு பொலிஸ் நிலையத்தில் வைத்துச் சந்தித்தார். இதன்பின்னர் ஊடகங்களிடம் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தண்ணிமுறிப்பு குருந்தூர்மலைப் பகுதியில் தமது வயல்காணிகளைப் பண்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்ட சாமித்தம்பி ஏகாம்பரம், சிறீரத்தினம் கஜரூபன், வரதன் இளமாறன் ஆகிய மூவர் இன்று (நேற்று) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொல்லியல் திணைக்களத்தின் எல்லைக்கல் இடப்பட்ட பகுதிகளுக்குள் பண்படுத்தல் செயற்பாடு மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே குறித்த மூவரும் கைதுசெய்யப்படுள்ளனர். இந்த விடயத்தை அறிந்தவுடன் உடனடியாக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்துக்கு வருகைதந்து, கைதுசெய்யப்பட்ட மூன்று பேருடனும் கலந்துரையாடியிருந்தேன்.

அத்துடன் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் கலந்துரையாடியதில், தமக்கு வவுனியாவில் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றதாகவும், தொல்லியல் திணைக்களத்தின் பகுதிக்குள் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபட்டதற்காகவே அவர்களைக் கைதுசெய்ததாகவும் தெரிவித்தனர்.

இந்தக் காணிகள் அனைத்தும் அந்த மக்களுக்குரிய காணிகள் என்பதை பொலிஸ் பொறுப்பதிகாரிக்குத் தெளிவுபடுத்தினேன். ஏற்கனவே மக்கள் பயிற்செய்கை மேற்கொண்ட காணிகளில், மக்களைத் தொடர்ந்து பயிற்செய்கை மேற்கொள்ளவிடாமல் தடுத்துக்கொண்டிருக்கும் கேவலமான செயற்பாடுகளே இங்கு இடம்பெற்று வருகின்றன என்பதையும் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் தெரிவித்தேன்.

தொல்லியல் திணைக்களம் தமது எண்ணத்துக்கு ஏற்றவாறு எல்லைக்கற்களை அமைத்து காணிகளை அபகரித்து வைத்திருந்தால் மக்கள் எங்கே விவசாயம் செய்வது? இவ்வாறான அடாவடிச் செயற்பாடுகளே இந்த நாட்டில் தற்போது இடம்பெறுகின்றன - என்றார். (அ-ம-26)

## திஸ்ஸ...

களைக் காணி உரிமையாளர்களிடம் மீளவும் வழங்குமாறு வலியுறுத்தியும் இன்று மீண்டும் போராட்டம் இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெறும் இந்தப் போராட்டம், இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் ஆரம்பமாகி வெசாக் நாளான நாளை திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் நிறைவடையும்.

குறித்த போராட்டத்தில் அரசியற் கட்சிகள், சிவில் சமூக அமைப்புக்கள், பொது மக்கள் மற்றும் ஆதரவாளர்கள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-66)

## கூட்டுறவுச்...

சங்கங்களுக்கும் உப்பு தாராளமாக விநியோகிக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

உப்பின் விலை கட்டுப்பாடற்ற ரீதியில் அதிகரித்துள்ள நிலையில், அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மன்னாரில் உப்பைக் கொள்வனவு செய்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள அனைத்து பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் விநியோகித்துள்ளது. பொதுமக்கள் ஒரு பக்கெட் உப்பை 179 ரூபாவுக்குப் பெற்றுக்கொள்ளமுடியும். ஒரு நபருக்கு ஆகக்கூடியதாக 3 உப்புப் பக்கெட்டே வழங்கப்படும் - என்றுள்ளது. (அ-ம-27)

## தமிழ்த்...

தூய அழைப்பாக இருந்தால், தமிழரசுக் கட்சியை ஆதரிக்கத் தயார் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்தாவது:-

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் பின்னர், தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து தமிழ் மக்கள் படிப்படியாக விலகிவருகின்றார்கள் என்று ஒரு செய்தி பரப்பப்பட்டு வந்தது. இவ்வாறான ஒரு காலச் சூழலில் பிரதேசத்தின் அபிவிருத்தியை முன்நிறுத்திய ஒரு தேர்தலில் மக்கள் தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி வாக்களித்துள்ளனர்.

இதனூடாக வடக்கு கிழக்கில் தென்னிலங்கை இனவாதிகளுக்கு இடங்கொடுக்கப்படாது என்ற செய்தி தென்னிலங்கை ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்த் தேசியப் பரப்பில் அனேக பிரதேசங்களில் தமிழ் தேசியக் கட்சிகள் வெற்றிபெற்றுள்ளபோதிலும், ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மையில் உறுதியானநிலை இல்லை. தமிழ்த் தரப்புகள் ஆட்சியமைப்பதற்காக ஒற்றுமையாகச் செயற்படவேண்டியது அவசியம். கொள்கைவழியில் நின்று நாங்கள் தமிழரசுக் கட்சியையும் ஆதரிப்போம். அதிகாரக் கதிரைக்கான அழைப்பாக அல்லாமல், தமிழ்த் தேசியத்தின்பால் தூய்மையான அழைப்பாக இருந்தால், நாங்கள் தமிழரசுக் கட்சியை நிச்சயமாக ஆதரிப்போம். தமிழரசுக் கட்சியை ஓரங்கட்டும் எண்ணம் எங்களுக்கு இல்லை. அவர்களுடன் பேசி இணைந்து பயணிப்பதற்குத் தயாராகவே உள்ளோம்.

தவறான பாதையில் மக்கள் வழிநடத்தப்படுவதை உணர்ந்து, அதை வெளிப்படுத்தி தேசியத்தின் பாதையில் மக்களை கொண்டுசெல்ல நாம் முன்வந்தோம். 2010ஆம் ஆண்டில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸாக எமது பயணத்தை ஆரம்பித்தபோது, அக்காலத்தில் எமக்கு பெரியளவில் ஆதரவு கிட்டவில்லை. எனினும், தமிழ்த் தேசியத்தின் பாதையில் தளராமல் பயணித்தோம்.

இதனால், 2018ஆம் ஆண்டில் நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் எங்களுக்கு நூற்றுக்கும் அதிகமான ஆசனங்கள் கிடைத்தன. தொடர்ந்து 2020ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் இரு நாடாளுமன்ற ஆசனங்களைப் பெற்றோம். 2024ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் சரிவைச் சந்தித்தாலும், தற்போது மீண்டும் ஒரு புத்தெழுச்சி கிடைத்துள்ளது. இந்த உள்ளூராட்சித் தேர்தலில் எமது கொள்கையை ஏற்று எம்முடன் பயணித்த ஜனநாயகத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அருந்தவபாலன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் ஆகியோருக்கு இவ்விடத்தில் நன்றி கூறுகின்றேன்.

தமிழ்த் தேசியத்தில் பயணிக்குமாறு மக்கள் உத்தரவிட்டுள்ளனர். அந்த உத்தரவை இதர கட்சிகள் பின்பற்றவேண்டும் என்பதே எனது கோரிக்கை - என்றார். (அ-ம-125-20)

## வல்வை...

பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்படும் பாரம்பரிய, பண்பாட்டு, கலாசார நிகழ்வான வல்வை இந்திரவிழா நாளை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்திரவிழாவை அலங்கரிக்கும் முகமாக 3 கிலோ மீற்றர் நீளத்திற்கு வாழை மரங்கள் மற்றும் வர்ணவிளக்குகள் அலங்காரத்துடன் வானுயர் கட்டவுட்டுகள், வானுயர் முப்பரிமாணப் பொம்மைகள், நூற்றுக்கும் மேற்பட்ட இராட்சத புகைக்கூண்டுகள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், நீர்நடன நிகழ்வுகள், பத்துக்கும் மேற்பட்ட மேடைகளில் இசைநிகழ்ச்சிகள், நாட்டிய நடன நிகழ்சிகள், பொம்மலாட்ட நிகழ்வுகள், சிலம்பாட்ட நிகழ்வுகள், கணிதப் புதிர்ப் போட்டிகள் போன்றனவும் இடம்பெறவுள்ளன. (அ-ம-66-26)

# மாணவி உயிர்மாய்ப்பு விவகாரம் முறையான விசாரணை நடக்கும்

## பிரதமர் நாடாளுமன்றில் தெரிவிப்பு



**கொழும்பு, மே 11**

**உயிரை மாய்த்துக்கொண்ட பாடசாலை மாணவியின் விவகாரத்தில் முறையான விசாரணைகள் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சரும், பிரதமருமான ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அமர்வின்போது தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், குறித்த பாடசாலை மாணவியின் விவகாரத்தில் முதல் சம்பவம் இடம்பெற்றபோது அது முறையாக ஆராயப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த விடயம் குறித்தும், ஆசிரியர் தொடர்பிலும் ஏன் கல்வி அமைச்சுக்கு முறையாக அறிவிக்கவில்லை என்பது தொடர்பில் அந்தப் பாடசாலையின் அதிபரிடம் விளக்கம் கோர அமைச்சில் முன்னிலையாகுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது உணர்வுபூர்வமானதொரு விடயமாகும். இவ்வாறான சம்பவங்களை எவருக்கும் குறிப்பாக பெற்றோருக்கு தாங்கிக்கொள்ள முடியாது. ஆகவே இந்த விடயம் குறித்து பேசுவதிலும், தலையிடுவதிலும் அவதானத்துடன் செயற்படவேண்டும். இந்த விடயத்தை அரசியல் ரீதியானதொரு விடயமாக கருதக்கூடாது. ஆகவே சமூகம் என்ற அடிப்படையில் அனைவரும் தோல்வியடைந்துள்ளோம். இதற்கு அனைவரும் பொறுப்புக்கூற வேண்டும். இவ்வாறான சம்வங்கள் இனியும் தோற்றம் பெறாத அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்றார். (ச-இ)

## இலங்கை-இந்தியா நட்புறச்சங்கத்தின் தலைவராக நளிந்த

கொழும்பு, மே 11

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சரும் அரசாங்கத்தின் தலைமை அமைப்பாளருமான நளிந்த ஜெயதிஸ்ஸ, பத்தாவது நாடாளுமன்றத்துக்கான இலங்கை? இந்திய நாடாளுமன்ற நட்புறவு சங்கத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நாடாளுமன்ற தொடர்புத்திணைக்களம் இதனை தெரிவித்துள்ளது. (ச-இ)

## இரு கட்டடங்களில் கொழும்பில் தீ விபத்து

கொழும்பு, மே 11

கொழும்பு வொக்ஷோல் வீதியிலுள்ள இரண்டு கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த தீ விபத்து நேற்று சனிக்கிழமை ஏற்பட்டுள்ளது. தீப்பரவலை கட்டுப்படுத்தும் பணிகளில் 5 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டன.

தீ விபத்திற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ச-இ)

## பாடசாலை மாணவனின் உணவில் கஞ்சாப்பொதி

கொழும்பு, மே 11

கடவத்தை பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் காலை உணவுக்காக பாடசாலைக்கு கொண்டு வந்த உணவுக்குள் 2 கஞ்சா பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளர்.

குறித்த மாணவன் ஒருவன் காலை உணவுக்காக பாடசாலைக்கு பாண் ஒன்றை கொண்டு சென்றுள்ளார்.

அதனை மாணவன் உண்டபோது அதில் இரண்டு பொதிகள் இருப்பதைக் கண்டு அதனை ஆசிரியரிடம் கொடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஆசிரியை, பாடசாலை மாணவனின் தாயாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, மாணவனின் தாயார் பாண் விற்பனை செய்யும் முச்சக்கரவண்டியிலிருந்து பாணை வாங்கியதாக ஆசிரியையிடம் கூறியுள்ளார்.

அதனையடுத்து சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து முச்சக்கரவண்டி சாரதியை விசாரணைக்குட்படுத்தியபோது குறித்த கஞ்சா பொதிகள் அடங்கிய பாணை தவறுதலாக கொடுத்துள்ளதாகவும் அவர் பாண் விற்பனை செய்யும் போர்வையில் போதைப்பொருளை விற்பனை செய்து வந்துள்ளார் என்றும் தெரியவந்துள்ளது. (ச-இ)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து 2.5 கிலோமீற்றர் தூரத்திலும், பல்கலைக்கழக வளாகத்திலிருந்து 500 மீற்றர் தூரத்திலும் 2 1/4 பரப்பு காணியில் 4 அறைகள், வரவேற்பறை, சமையலறை, 2 குளியலறை, விறாந்தை தனிக்கிணறு என 2000 சதுர அடியில் அமைந்த பெரிய வீடு பாவனைக்கு ஏற்ற வகையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

Whats app:-

+61 421 290 240

(CS/57250) J-1

**காணி விற்பனைக்கு**

நாவற்குழி உணவுக் களஞ்சியத்தின் மேற்கு வாசலுக்கு எதிராக அமிர்தா வீதியில் 40 பரப்புக் காணி விற்பணைக்குண்டு.

விபரங்களுக்கு: 074 140 0693

(CS 58214) D"

**சாரதி தேவை**

கொழும்பு மற்றும் யாழ்நகரில் இயங்கிவரும் பிரபல நிறுவனம் ஒன்றிற்கு கனகர வாகன சாரதி தேவை. முன் அனுபவம் வாய்ந்தவர்கள் விரும்பத்தக்கது. (யாழ் - கொழும்பு)

தொடர்பு: 077 690 8987

**பெண் வேலையாள் தேவை**

திருநெல்வேலியில் அமைந்துள்ள புடவை விற்பனை நிலையமொன்றிற்கு பெண் வேலையாள் தேவை.

சம்பளம் நாள் ஒன்றிற்கு 1000 + போனஸ்
வயதெல்லை 18 - 30
வேலை நேரம் 9.00 A.m - 7.00 P.m
தொடர்பு - 0763063306

(CS 58210) D"

**காணி விற்பனைக்கு உண்டு**

- உரும்பிராய் கற்பகப்பிள்ளையார் கோயில் வீதியில் 3 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்கு
- நல்லூர் கோயிலுக்கு அண்மையாக 2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

தொடபுர்புகளுக்கு:

077 794 8012

**வேலையாள் தேவை**

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரபல அழைப்பிதழ் காட்சியறைக்கு Sales and admin officer தேவை. Basic computer knowledge அவசியம்.

தொடர்புகளுக்கு: 077 815 2693

**கடை வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், திருநெல்வேலி, கே. கே. எஸ் வீதி ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு கடை வாடகைக்கு தேவை.

(CS 3143(A)) D"

தொடர்பு :- 077 919 1529

**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் தையல் ஸ்தாபனம் ஒன்றிற்கு வீடு வாடகைக்கு தேவை.

(CS 3143 (B)) D"

தொடர்புக்கு :- 077 919 1529

**வாடகைக்கு உண்டு**

இயங்கி கொண்டு இருக்கும் விடுதி சகல தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு.

(துப்பரவு பணியாளர்கள் தேவை ஆண், பெண்)

(CS 3148) D"

தொடர்புகளிற்கு:- 077 724 2427
077 741 2713

**வரவேற்பாளர் தேவை**

யாழ் நகரில் இயங்கும் பிரபல நகைக்கடை ஒன்றிற்கு வரவேற்பாளர் தேவை.

- வடமாகாணத்தைச் சேர்ந்த ஆண்கள் விண்ணப்பிக்கலாம்.
- வயதெல்லை கிடையாது.

தொடர்பு:- 076 658 0661

**தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல அழகு நகைகள் விற்பனை நிலையத்திற்கு காசாளர் மற்றும் உதவியாளர்கள் தேவை.

தொடர்பு : 0773515980
0775632734

(CS/58212) D"

**Need for Bride**

We are seeking a pretty, educated and english-speaking girl for our son, aged 41.
Father: Tamil, originally from Lawtons Road, Manipay, currently residing in Melbourne, Australia.
Mother: Sinhala, residing in Colombo
About our son: He holds a senior position in the plumbing industry, earning a six-figure salary. He is never married, owns his own home, and is a committed Christian.
Caste, race, and religion are not a concern.
We also welcome proposals from ladies who are divoreee without children.
Son will sponsor his future partner to migrate to Australia.
If you are interested, please feel free to contact me via WhatsApp or email at:

Email: Trelan.cl20@yahoo.com
Phone: + 61 413 233 767

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 - 11 - 1952



மறைவு
08 - 05 - 2025

## குழந்தைவேலு இராசலிங்கம்

காரைநகர் பலகாடை பிறப்பிடமாகவும் காரைநகர் புதுறோட், இல 55/2, பழம் வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு இராசலிங்கம் கடந்த 08.05.2025 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்தையா சுப்பிரமணியம் செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜினி (அவுஸ்திரேலியா), சண்முகஜோதி (லண்டன்), ஆகியோரின் அன்புத் தந்தையும், கிரிதரன் (அவுஸ்திரேலியா), தர்சினி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவஞானம், சரஸ்வதி, சவுந்தரம் மற்றும் இராமச்சந்திரன், கமலாதேவி, தவமணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரனும் வேலாயுதபிள்ளை, திருஞானசம்பந்தர், காலஞ்சென்ற அன்னலெட்சுமி, சிவஞானம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் அபினேஷ், அபிநயா, அக்ஷயா, அக்ஷிதன், அக்ஷரா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக காரைநகர் சாம்பல் ஓடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும் இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இல 55/2 பழம் வீதி**
**கந்தர்மடம்**
**யாழ்ப்பாணம்**

**குடும்பத்தினர்.**
**மகன் - 0773126543**

(CS 58191) E-1

## காணி விற்பனைக்கு

யாழ் கல்வியங்காட்டில் G.P.S
விளையாட்டரங்கிற்கு முன்னால்
11 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **0740752069**

## விற்பனையாளர்கள் தேவை

யாழில். இயங்கி வரும் இலத்திரனியற்
சாதனங்கள் விற்பனை நிறுவனம் ஒன்றிற்கு
விற்பனையாளர்கள் தேவை.
வயது எல்லை - 21 - 45
கொடுப்பனவு நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
அலுவலக நேரத்தில் மாத்திரம்
தொடர்பு கொள்ளவும்

அழைப்பு எண்:- **076 324 1761**

(CS/3138) J-1

ஊடகப்பரப்பில் தனித்துவமாய்
திகழும் Capital FM / Capital
TV யில் கடமையாற்ற
சந்தைப்படுத்தல் முகாமையாளர்
(Marketing Manager)
யாழ்ப்பாணத்தில் பணியாற்ற தேவை

**Requirements**

Professional Qualification/ BSC in Marketing
3 Years of Working Experience in Marketing
(With at Least 1 Year in televison / Media field experience)
Excellent Communication and Presentation skills
Should Develop & Implement a Comprehensive Marketing Strategy Alignment with Business Goals

விண்ணப்பங்களை
**hr@liverpoolholdings.lk** என்ற
மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி
வையுங்கள்

அல்லது 077 103 7844 என்ற இலக்கத்திற்கு
WHATSAPP செய்யுங்கள்

Capital Television Capital FM 94.0-103.1
TRYMAS MEDIA NETWORK (PVT) LTD

## மணமகள் தேவை

யாழ் இந்து,
35 வயதுடைய அரச
உத்தியோகம் பார்க்கும்
மணமகனுக்கு
மணமகள் தேவை.

தொடர்பு:- **077 612 7792**

(CS/58193) J-1

## தேவை

இருவர் வசிப்பதற்கு
சிறிய வீடு வாடகைக்குத்
தேவை.
யாழ்ப்பாணத்தில் இருந்து
சுன்னாகம் வரையான
பிரதேசங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- **077 676 8633**

(CS/58194) J-1

## தேவை

கொழும்பு கிருலப்பனையில்
உள்ள இரும்பு மொத்த
வியாபார ஸ்தலமொன்றிற்கு
பின்வரும் வேலையாட்கள்
தேவை.

- **பாரஊர்தி சாரதிமார்**
- **கூலியாட்கள்**

தகுந்த சம்பளம்,
தங்குமிடம் வழங்கப்படும்.

**070 747 7077**
**077 137 8008**

# தாயுமான அப்பாவிற்கு
# நெஞ்சை நனைக்கும் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த 22.04.2024 திங்கட்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## இராஜதுரை கணேசராஜா

(JP- பத்தர், முன்னாள் மாநகரசபை உறுப்பினர்
திதி: வளர்பிறை சதுர்த்தசி



தோற்றம் 23.11.1954
மறைவு 22.04.2024

தாய் கை இழந்த பிள்ளைகளாய், நானும் என் அண்ணனும்,
நான்கு வயதில் நிழலற்ற வாழ்வில் தவித்த நொடிகளில்,
அப்பா, எங்கள் வாழ்வில் – தாயாய் மாறி,
உங்கள் கைகளால் எங்களைத் தூக்கி வளர்த்தீர்கள்.

முழு வாழ்க்கையையும் எங்களுக்கு அர்ப்பணித்து,
உழைப்பை மட்டும் ஊட்டமாக வைத்தீர்கள்.
தாயின் பாசம், தந்தையின் வலி –
இரண்டும் ஒரே நிழலிலே எங்கள் மீது சாய்ந்தது.

உங்கள் முகத்தில் ஓய்வில்லை, மனத்தில் சோர்வில்லை,
மனைவியின்றியும் வாழ்ந்த ஒரு வீரன் நீங்கள்
தூக்கம் தொலைத்து, நிம்மதியைக் துறந்து,
எங்கள் எதிர்காலத்திற்கே வாழ்ந்தீர்கள்– முழுமையாக.

ஊரே உங்களை நினைக்கும் உழைப்பாளியாக,
அரசியலில் நேர்மை, சாலையில் நெஞ்சம்,
கோயில் தேரில் உந்திய கை உமதே,
சமூகச் சேவையில் நிழலாய் நின்ற செயல்களும் உமதே

மருமகனும் உங்களை தந்தைபோல் போற்றி வாழ்ந்தான்,
உங்கள் வழிகளில் விம்பமுமாய் நம்பிக்கையாய் நடக்கிறான்.
பிள்ளைகளின் பாசம் உங்களுக்கு துணையாய் இருந்தது,
பேரப்பிள்ளைகளின் நேசம் உங்களை வானத்தில் உயர்த்துகிறது.

ரிஷ்விதா – உங்கள் புன்னகையை மீண்டும் காண விரும்பும் சிறு மனம்,
ஷஷிஜா – உங்கள் குரலை ஓசையாய் காற்றில் தேடும் இனிய ராகம்,
ஐஷிகன் – தாத்தா போல் நிமிர்ந்து வளர விரும்பும் ஒளிக்கதிர்.
அவர்கள் நினைவில் நீங்கள் வாழ்கிறீர்கள் – நாளும், நேயமும் கூட.

வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் கோயில்
தேர்த்திருவிழா, அன்று உங்கள் உயிர் பிரிந்தது
நினைவில் அந்த நாளும் நெஞ்சை கனத்து நனைக்கிறது
இன்று இல்லை என்றாலும், உங்கள் நினைவு
உயிரோடு எங்கள் மூச்சிலும் தேனாய் உருகுகிறீர்கள்

கோயில் திருவிழாக்கள், ஊர் புனரமைப்புக்கள் –
உங்கள் பணி இல்லாமல் நடந்ததில்லை.
அரசியலில் நேர்மை, மக்களிடையே நெருக்கம்,
உங்கள் பெயரைக் கேட்டால் இன்றும் மௌனம் நிறைந்த மரியாதை.

உங்கள் வரலாறு எங்கள் வாழ்வில் ஒளியாய்,
உங்கள் பெயர் எங்கள் இதயத்தில் நிலையாய்.
உங்களை இழந்தாலும் உங்களுக்கு கிடைத்த இடம்,
என்றும் எங்கள் மனத்தின் மேன்மை பதமாகும்!

அப்பா, நீங்கள் போன நாளிலிருந்து ஒரு வெற்று எங்கள் வாழ்வில்,
ஆனால் நீங்கள் வாழ்ந்த வாழ்க்கை எங்கள்
வழியில் ஒளியாய் இருக்கிறது.
உங்கள் நினைவை எங்கள் நெஞ்சில் சுமந்து,
உங்கள் புகழோடு இன்றும் தொழுகின்றோம்.
நீங்கள் எம்மை விட்டு போனாலும்,
உங்கள் பாசம் எங்கள் இரத்தத்தில் ஓடுகிறது.
நீங்கள் பேசவில்லை என்றாலும்,
உங்கள் நினைவு எப்போதும் பேசிக்கொண்டே இருக்கும்.

**உங்கள் பிரிவால் துயருறும்**
**பிள்ளைகள், மருமகன்**
**மற்றும் பேரப்பிள்ளைகள்**

(CS/58206) J-1



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

மற்றறிவாம் நல்வினை யாம்இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்
முற்றியிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு

– நாலடியார்

மலை : 34 | வள்ளுவர் ஆண்டு : 2055 | சித்திரை 28 | ஞாயிற்றுக்கிழமை (11.05.2025) | சிகரம் :144

○ நிலாந்தன்

# “இயங்கவேண்டிய நேரம்; காலம் ?”

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகள் கிடைத்தபின் முல்லைத்தீவில் இருந்து ஒரு தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் முகநூலில் பின்வருமாறு எழுதினார். “முல்லைத்தீவு ரவிகரனோடு, கிளிநொச்சி சிறீயரோடு” என்று. அதற்கு கிளிநொச்சியைச் சேர்ந்தவரும் முன்பு பிரதேச சபை உறுப்பினராக இருந்தவரும், இப்பொழுது சுமந்திரனின் தீவிர விசுவாசியுமான ஒருவர் பதில் எழுதினார் “யாழ்ப்பாணம் சுமந்திரனோடு” என்று. இது ஒரு சமூக வலைத்தளக் காட்சி.






இரண்டாவது காட்சி, தேர்தல் வெற்றிகளின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த சுமந்திரன், “தமிழரசுக் கட்சி பலவீனமடையவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக சேர்ந்து இருந்ததைவிட தற்போது தனியாக பலமாக வெளிவந்திருக்கிறது” என்று கூறியுள்ளார். எனினும், இது “நாங்கள் சேர்ந்து இயங்கவேண்டிய நேரம்; காலம்” என்றும் கூறியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து விலகிச் சென்ற கட்சிகளை நோக்கிய மறைமுக அழைப்பு ஒன்று அதில் உண்டு. எனினும் தனது பலத்தை நிரூபித்துக்காட்டிய பின் அந்தப் பலத்தின் அடிப்படையில்தான் அந்த அழைப்பு வந்திருக்கிறது.

ஆனால் மூத்த அரசியற் செயற்பாட்டாளர் ஆகிய பஷீர் காக்கா அண்மையில் ஊடகச் சந்திப்பு ஒன்றை வைத்து அதில் தமிழரசுக் கட்சிக்குள் இருந்து சுமந்திரனை நீக்க வேண்டும் என்ற பொருள்பட கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதேசமயம், தேர்தல் முடிவுகளின் பின் கருத்துத் தெரிவித்த கஜேந்திரகுமார், தமிழரசுக் கட்சி ‘ஏக்கிய ராஜ்ய’ என்ற தீர்வைக் கைவிடுமாக இருந்தால் தாங்கள் அக்கட்சியோடு இணைந்து செயற்படத் தயார் என்று கூறியுள்ளார். அந்த நிபந்தனையைத் தமிழரசுக் கட்சி ஏற்காவிட்டால் உள்ளூராட்சிசபைகளை தமிழரசுக் கட்சியோடு இணைந்து நிர்வகிப்பதற்கு முன்னணி தயாராக இல்லை என்ற பொருள் அதில் உண்டு.

மேற்கண்டவைகள் யாவும் தேர்தல் முடிவுகளுக்குப் பின்னரான தோற்றப்பாடுகளின் தொகுக்கப்பட்ட காட்சி. இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் தெளிவான சித்திரம் என்ன? தமிழ் மக்கள் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்ததைப் போலவே, உள்ளூராட்சிசபைத் தேர்தலிலும் ஒரு தேசமாக வாக்களித்திருக்கிறார்கள். ஆனால் கட்சிகள்தான் ஆளுக்காள் பிரிந்துநிற்கின்றன. இனிமேலும் பிரிந்துநிற்கப்போகின்றனவா?

தமிழரசுக் கட்சியின் வெற்றி என்பது ஒருவகையில் சுமந்திரனின் வெற்றியும் சிறீதரனின் வெற்றியும்தான். அதாவது அது தமிழரசுக் கட்சிக்குள் ஏற்கனவே காணப்படும் பிளவைக் கூர்மையாக வெளிப்படுத்தும் ஒரு வெற்றி. அப்படியென்றால் நீதிமன்றத்தில் இருந்து கட்சியை வீட்டுக்குக் கொண்டுவரக்கூடிய வாய்ப்புகள் இப்போதைக்குக் கிடையாதா? தன் கட்சிக்குள்ளேயே ஒருமைப்பாட்டை, ஐக்கியத்தைப் பேணமுடியாத தலைமைகள் கட்சிக்கு வெளியே தேசிய ஐக்கியத்தை எப்படிப் பேணமுடியும்?

தேர்தல் வெற்றிக்குப் பின் சுமந்திரனின் ஆதரவாளர்களும் முன்னணியின் ஆதரவாளர்களும் சமூக வலைத்தளங்களில் எழுதிவரும் கருத்துகளைத் தொகுத்துப் பார்த்தால் தேசம் தொடர்ந்தும் கட்சிகளாகப் பிரிந்துநிற்கப்போகிறது என்றே தெரிகிறது. சுமந்திரனின் விசுவாசிகள் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் யாழ். மாநகரசபையின் பிரதான வேட்பாளர் உட்பட பல பிரதானிகள் தங்கள் சொந்த வட்டாரங்களில் தோற்கடிக்கப்பட்டிருப்பதை ஏளனத்தோடு சுட்டிக்காட்டிவருகிறார்கள். ஆனால் சுமந்திரனுடைய தாய்க் கிராமத்திலேயே, குடத்தனையிலேயே தமிழரசுக் கட்சி ஒரு முன்னாள் இயக்கத்தவரால் தோற்கடிக்கப்பட்டிருக்கிறது என்ற விடயத்தை அவர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

கட்சிகளுக்கு இடையிலான, கட்சிகளுக்கு உள்ளேயான இந்த ஆழமான பிளவுகளை தனக்குச் சாதகமான ஒரு தோற்றப்பாடாக என்பி.பி. கருதுகின்றது. அதனால்தான் கூறுகிறது, வடமாகாணத்தில் தனக்கு ஒரு லட்சத்து 50 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் கிடைத்தன என்று. யாழ்ப்பாணத்தில் அதுதான் இரண்டாவதாக நிற்கிறது. வவுனியாவில், மன்னாரில் முதலாவதாக நிற்கிறது. மட்டக்களப்பில் இரண்டாவதாக நிற்கிறது. வன்னியில் இரண்டாவதாக நிற்கிறது.

தமிழரசுக்கட்சிக்கு 75 வயது. காங்கிரஸ் கட்சிக்கு அதைவிட அதிக வயது. இந்த இரண்டு கட்சிகளையும் தனித்தனியாக எடுத்து அவற்றோடு என்.பி.பி.யை ஒப்பிட்டுப் பார்த்தால், 6 மாதங்களில் ஒன்றுமே இல்லாமல் இருந்த ஒரு கட்சிக்கு, தென்னிலங்கை மையக் கட்சிக்கு, எவ்வளவு வாக்குகள் கிடைத்திருக்கின்றன?

அதேசமயம் எல்லாத் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கும் கிடைத்த வாக்குகளைக் கூட்டிப் பார்த்தால் என்.பி.பி. பின் தள்ளப்பட்டுவிடும். அதாவது கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிடைத்த அதே சித்திரம்தான் மீண்டும் கிடைத்திருக்கின்றது. இதுதான் உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவுகள் தமிழ் கட்சிகளுக்கு உணர்த்துபவை. இந்தச் சித்திரமே தொடர்ந்தும் காணப்படுமாக இருந்தால் உள்ளூராட்சிசபைகளை நிர்வகிப்பதில் குழப்பங்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகம்.

கஜேந்திரகுமார் இறந்தகாலத்தில் இருந்து நிறையப் படித்திருப்பதும் அந்த அடிப்படையில் நெகிழ்வாக நடந்துகொள்வதும் தமிழ்த் தேசிய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப உதவும். ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்போடு அவர் உரையாடியதாகவும் அவர்களிடமிருந்து இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பதில் கிடைக்கவில்லை என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்ள சில கட்சிகள் ஏற்கனவே பழைய கூட்டமைப்பை மீண்டும் புதுப்பிக்கும் விருப்பத்தோடு காணப்படுகின்றன. கிளிநொச்சியில் சந்திரகுமாரை அவர்கள் உள்வாங்கியதன்மூலம் அவர்கள் தெளிவாக சுமந்தி ரனை நோக்கிச் சாய்ந்தார்கள். எதிர்காலத்தில் கூட்டமைப்பாக செயற்படும் உள்நோக்கம் இருந்தால் அந்தக்கட்சி முன்னணியை நோக்கி வருவதற்கான வாய்ப்புகள் குறைவு.

எனவே உள்ளூராட்சிசபைகளில் என்.பி.பி.க்கு எதிராக தமிழ்க் கட்சிகள் ஒரு தேசமாகத் திரளும் வாய்ப்புகள் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் பிரகாசமாக இல்லை. அறுதிப் பெரும்பான்மை இல்லாத சபைகளில் நிச்சயமற்ற தலைமைத்துவம் தான் இருக்கும். முன்னணிக்கும் தமிழரசுக் கட்சிக்கும் இடையிலான பிளவு, கொள்கை அடிப்படையிலானது என்று முன்னணி கூறுகிறது. ஆனால் ‘ஏக்கிய ராஜ்ய’ என்ற தீர்வு சுமந்திரனின் விருப்பமா அல்லது முழுக் கட்சியினுடையதும் நிலைப்பாடா என்ற கேள்விக்கு விடை வேண்டும். உள்ளூராட்சிசபைத் தேர்தல் வெற்றிகளின் மூலம் தமிழரசுக் கட்சியின் மீதான சுமந்திரனின் பிடி முன்னரைவிடப் பலமானதாகவும் இறுக்கமானதாகவும் மாறியிருப்பதனால், அவர் தனது நிலைப்பாட்டைக் கட்சியின் நிலைப்பாடாக மாற்றுவார் என்ற ஒரு வாதம் முன்வைக்கப்படுகிறது.

ஆனால், ஏக்கிய ராஜ்ய என்பது தமிழரசுக் கட்சியின் ஒட்டுமொத்த நிலைப்பாடு அல்ல. கட்சியின் பதில் தலைவர் சிவஞானம் உட்பட கிளிநொச்சியில் பெரு வெற்றிபெற்ற சிறீதரன், வன்னியில் ரவிகரன் உட்பட பெரும்பாலான ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எல்லாருமே வெளிப்படைத் தன்மை மிக்க சமஷ்டிக்குத்தான் ஆதரவாக உள்ளார்கள்(கிழக்கில் சாணக்கியனைத் தவிர). ஒற்றையாட்சிப் பண்புமிக்க தீர்வுப் பொதி ஒன்றுக்கா தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் வாக்களித்தார்கள்? இல்லை. எனவே இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை சுமந்திரனின் கட்சியாகப் பார்க்கமுடியாது. இது தொடர்பாக அதாவது ஏக்கிய ராஜ்ய தொடர்பாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் ஒரு பகிரங்க மேடையில் அமர்ந்து வெளிப்படைத் தன்மை மிக்க ஓர் உரையாடலைச் செய்யவேண்டும்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் பரப்புரைகளின்போது கஜேந்திரகுமார் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார். இது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்று. தமிழ் மக்கள் தமது தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு முடிவை தேர்தலில் வெளிப்படுத்திவிட்டார்கள். அந்த முடிவின் அடிப்படையில், பொது எதிரிக்கு எதிராக எப்படித் தேசமாகத் திரளலாம் என்றுதான் சிந்திக்கலாமே தவிர மீண்டும் கட்சிகளாகச் சுருங்கவோ சிதறவோ முடியாது. அதிலும் குறிப்பாக இறந்தவர்களை நினைவுகூரும் ஒரு மாதத்தில் தமிழ் மக்கள் வழங்கிய ஆணை அது. அதற்குத் தமிழ்க் கட்சிகள் கீழ்ப்படியவேண்டும். இல்லையென்றால் மாகாண சபைத் தேர்தலின்போதும் மீண்டும் இது தமிழ் மக்களின் தலைவிதியைத் தீர்மானிக்கும் ஒரு தேர்தல் என்று கூற வேண்டியிருக்கும். ஏனென்றால் என்.பி.பி. தமிழர் தாயகத்தில் பெரும்பாலும் இரண்டாம் இடத்தில் நிற்கிறது.



# ஒற்றுமைக்கு ஏன் முன்நிபந்தனைகள்?

முு.மனோகர்

உள்ளூராட்சித் தேர்தலின் பின்னரான நிலைமை தொடர்பான விடயத்தில் தமிழரசுக்கட்சியின் பதில் செயலாளர் சுமந்திரனை கையாளவிடுவது எதிர்பார்க்கும் நோக்கங்களுக்கு மாறான விளைவையே தரும் என்பதனை தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்குக் குறிப்பாக மத்திய குழுவினருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக யாழ். மேயர் விடயம் கவனத்துக்குரியது. இதனை முன்நிபந்தனைபோன்று வைப்பது ஏற்புடையதல்ல.

சுமந்திரன் கட்சிக்குள் நுழைந்த காலத்தில் இருந்தே தமிழ்த்தேசிய உணர்வாளர்களை நோகடிக்கும் விதத்திலேயே செயற்பட்டுவந்துள்ளார். 2018 நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின்போது தேர்தல் முடிந்த பின்னரே மேயர் யாரென்பது தொடர்பாக முடிவெடுப்பது எனத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக முடிவெடுத்தனர். ஆனால் தமிழரசுக் கட்சிப் பணிமனையில் நடைபெற்ற அந்தக் கூட்டத்தின் முடிவைத் தட்டச்சுச் செய்துகொண்டிருக்கும்போது வெளியில் வந்த சுமந்திரன் ஊடகவியலாளர்களிடம் 'ஆர்னோல்ட் தான் மேயர்' என அறிவித்தார். சில நிமிட நேரத்தில் அங்கே வந்த கட்சித் தலைவர், செயலாளர் ஆகிய இருவரிடமும் 'ஆர்னோல்ட் தான் மேயர்' எனச் சுமந்திரன் சொல்கிறாரே எனக் கேட்டனர் ஊடகவியலாளர்கள். அவர்கள் இருவரும் அவ்வாறான முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்தனர். குழம்பிப்போயிருந்த ஊடகவியலாளர்கள் மீண்டும் அங்கு வந்த சுமந்திரனிடம் கட்சித் தலைவர், செயலாளரின் கூற்றைச் சுட்டிக்காட்டினர். அதற்கு மிக அலட்சியமாக 'அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். ஆனால், ஆர்னோல்ட் தான் மேயர்' என எகத்தாளமாகக் குறிப்பிட்டார். கட்சியில் தலைவர், செயலாளர் என்பதெல்லாம் ஒரு பொருட்டல்ல என்பதே அவரது முடிவு.

மாகாணசபையில் இறுதிப்போரில் நடைபெற்றது இனப்படுகொலையே என்றும் இதற்குச் சர்வதேச விசாரணையே வேண்டும் என்று முதலமைச்சர் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார். இது தற்போது ஜே.வி.பி. யின் சட்டத்தரணியாக விளங்கும் சுமந்திரனுக்குச் சினமூட்டியது. முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவர ஏற்பாடு செய்தார். சுமந்திரன் சார்பில் ஆர்னோல்ட்தான் மும்முரமாக இயங்கினார். பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்கினால் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தைத் தற்போதைய கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானமே ஆளுநரிடம் கையளித்தார். ஆனால், இந்த விடயம் தொடர்பாகப் பெருந்தலைவர் இரா. சம்பந்தனிடம் கலந்தாலோசிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அந்தளவுக்குத் தன்னிச்சையாகச் செயற்பட்டார் சுமந்திரன், தனது சார்பில் இத் தீர்மானத்தைக் கொண்டுவந்ததுக்குச் சன்மானமாகவே ஆர்னோல்ட்தான் மேயர் என்றும் முடிவெடுத்தார்.

பொதுவேட்பாளர் விடயத்திலும் தன்னிச்சையாகவே முடிவெடுத்தார். யார் பொதுவேட்பாளர் என்று முடிவெடுக்க முன்னரே அவரைத் தோற்கடிப்பது எனச் சுமந்திரன் தீர்மானித்தார். வழக்கைத் தொடங்குவதற்கு முன்னரே தீர்ப்பை எழுதும் நீதிபதியானார் அவர். ஆயிரம் விகாரைகளை அமைக்கும் உறுதியுடன் இருக்கும் சஜித் பிரேமதாஸவே அவரது தெரிவாக இருந்தது. பொது வேட்பாளருக்கு ஆதரவாக மாவை செயற்பட்டார் என்பது வெளிப்படை. கட்சித் தலைவர் கிளிநொச்சியில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றினார். பொதுவேட்பாளரின் பணிமனைக்குச் சென்று ஆசீர்வதித்தார். அப்படியிருந்தும் அண்மையில் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களிடம் விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பியுள்ளார் சுமந்திரன்.

யாழ். மேயர், பொதுவேட்பாளர் விடயங்களில் தலைமையின் முடிவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துவிட்டு மத்திய குழு என்றொரு முலாம் பூசித் தமிழ்த்தேசிய நிலைப்பாட்டுக்கு ஆதரவானவர்களைக் கட்சியில் இருந்து துரத்துவதிலேயே இவர் அக்கறையாக உள்ளார். கட்சித் தேர்தலில் தனக்கு எதிராகச் செயற்பட்டவர்களை நீக்கினால்தான் தான் தலைவராக முடியும் என நம்புகிறார்.

கிழக்கு மாகாணசபையில் ஆட்சியமைக்கும் முயற்சி நடைபெற்றபோது தமிழரசுக் கட்சியினரைவிடக் குறைவானர்களாகவே முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினர் இருந்தனர். எனினும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினரையே முதல்வராக்க இரா. சம்பந்தன் முடிவெடுத்தார். பெரும்பான்மை தம்மிடம் உள்ளது என அவர் நினைக்கவில்லை. அவர் இன ஐக்கியத்தையே பெரிதாக நினைத்தார். அதேபோல தற்போது தமிழ்த்தேசியக் கட்சிகள் இணைந்து செயற்பட முடிவெடுப்பதற்கு முன்நிபந்தனை விதிப்பது போன்று யாழ். மேயர் எந்தக் கட்சி என்று தானே முடிவெடுக்கிறார்.

ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்று கூறுவார்கள். அந்த நிலையை உருவாக்கிச் சந்தி சிரிக்கும் நிலைமை உருவாகும் அபாயம் உள்ளது. எனவே, இந்த அபாயத்தைத் தவிர்க்கச் சுமந்திரனைத் தவிர்த்துக் கட்சித் தலைவரே நேரடியாகக் கையாள்வதே சிறந்தது.

அத்துடன் பொதுவேட்பாளருக்கு ஆதரவாகச் செயற்பட்டவர்களுக்கு விளக்கம் கோரும் கடிதத்தை மீளப்பெறுவது தமிழ்த்தேசியத்தை நேசிப்பவருக்கு ஆறுதலளிக்கும் விடயமாக இருக்கும்.

எனவே, தற்போது தமிழ்த்தேசியக் கட்சிகளாக இனங்காணப்படுபவர்களுடன் பேசும்போது யார் மேயர் என்பது போன்ற விடயங்களை முன்நிபந்தனையாக வைக்காமல் கூடிக் கலந்தாலோசிப்பதே சிறந்தது. இம்முயற்சி கைகூடும் வரை சுமந்திரனை ஒதுக்கிவைத்தாலே எல்லாம் சுபமாக முடியும். மாகாணசபை போன்று குழப்பமான சூழ்நிலைகள் உள்ளூராட்சி சபைகளில் தோன்றுவதைத் தவிர்க்க இது ஒன்றே வழி எனக் கருதுகிறேன்.

# பெண்ணடிமை

பெண்ணைப் பெண்ணாக
பார்க்காது
பெண் என்றால் வெறும்
உடல் என்று
உணருகின்றது இவ்வுலகம்

பெண்ணைத் தீண்டி
பெருமிதமடையும் பல விலங்குகள்
அதைப் பார்த்தும் பார்க்காதது போல,
தட்டிக்கேட்க
ஒரு நாதிகூடவில்லை
பெண்மையை உணரவில்லை
வெறும் சுயநலமாய் அலைகிறார்கள்

பெற்றவளும் பெண்தானே
உடன்பிறந்தவளும் பெண்தானே
உணர்வோடு அவர்களைக் காப்பது
பொறுப்பில்லையா?

பத்திரிகையின் முதற்பக்கம்
பத்து வயதுப்பெண் கற்பழிப்பு
பதறிப்போகிறது இதயம்
இதுதான் மனிதநேயம்
உள்ள சமுதாயமோ?
கட்டிக்கொடுத்தவன் வீட்டில்
கட்டிவைத்த மாடு போல
அவள் சாகும்வரை

சம்பளமில்லா வேலைக்காரியாய்
அடிமைப்படுகிறாள்.

பெண்ணுக்கென ஆசை இருக்கக்கூடாதா?
பெண்கள் வளரக்கூடாதா?
பெண் பிறப்பே சாபமா?
தெரியவில்லை எனக்கு
நாயை விடக்கேவலமாய்
நினைக்கிறார்கள் எம்மை சிலர்

உலகம் உணரும் என
உயிர் உள்ளவரை நம்பினாலும்
எம் சாம்பல் கரையும் வரைகூட
எம் சமுதாயம் மாறாது போலும்
என்ன செய்வது?

உடலை இழந்து உயிரோடு
ஊசலாடும் பெண்ணும்
கட்டியவனுக்காய் செருப்பாய்
தேயும் பெண்ணும்
எத்தனை எத்தனை ஆசைகளை
புதைத்திருப்பார்கள் அவர்களது மனதில்

இதுதான் பாரதி கண்ட
புதுமைப் பெண்ணா?
பாரதி கூறியே திருந்தாத
உலகம் நான் கூறித் திருந்துமா?
நல்லவன் போர்வையில் நடமாடும்
கொடூர மிருகங்கள் வாழும் உலகமிது

எம்மை ஒடுக்காதீர்கள்
எம் உணர்வுகளை நசுக்காதீர்கள்
நல்லது செய்யவேண்டுமென்பதில்லை
நாகரிகமாய் எம்மையும் வாழவிடுங்கள்
அது போதும் ....

- சதீஸ்சன் சரண்யா

# இந்தியா – பாகிஸ்தான் மோதலும் புவிசார் அரசியல் உறவும்



அ.நிக்ஸன்

பாகிஸ்தான் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பலுசிஸ்தான் மாகாணம், நிலப்பரப்பு அடிப்படையில் மிகவும் பெரியது. அந்தப் பகுதியைத் தனி நாடாக அறிவிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி பலுசிஸ்தான் போராளிகள் தொடர்ந்து போராடிவருகின்றனர். அந்தப் போராளிகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்கிவருவதாக பாகிஸ்தானும், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் உதவியளிப்பதாக இந்தியாவும் மாறி மாறி குற்றம் சுமத்திவருகின்றன.

பழங்குடி மக்களை அதிகமாகக் கொண்ட பலுசிஸ் தேசிய இன விடுதலைப் போராளிகளை அமெரிக்கா, பிரித்தானியா உட்பட ஐரோப்பிய ஒன்றியமும் பயங்கரவாத அமைப்பாக தடை செய்துள்ள நிலையிலும், 2004 ஆம் ஆண்டு முதல் பலூச் இன மக்களின் தன்னாட்சி கோரிக்கைக்காக பலுசிஸ் தேசிய விடுதலை இராணுவம் போராடிவருகின்றது.

காஷ்மீர் போராளி இயக்கங்கள் சிலவற்றுக்கு அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் பெரிய அளவில் தடைவிதிக்கவில்லை. ஆனால் பலுசிஸ் தேசிய விடுதலை இராணுவத்தை நோக்கி பல தடைகள் விதிக்கப்பட்டுள்ள பின்னணியில் இந்தியா மாத்திரம் பலுசிஸ் போராளிகளுக்கு ஒத்தழைத்து வருகின்றது.

இந்தப்பின்னணியிலேயே இந்தியா, பாகிஸ்தான் மோதல் 2000 ஆம் ஆண்டில் இருந்து மேலும் தீவிரமடைந்து வருகின்றது. காஷ்மீர் பஹல்காமில் கடந்த மாதம் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் ஆதரவு காஷ்மீர் போராளிகள் சுற்றுலாப் பயணிகள் 26 பேரை கொலைசெய்த பின்னர் ஏற்பட்ட முறுகல், கடந்த சில நாள்களாக இந்திய - பாகிஸ்தான் இராணுவ மோதலாக மாறியுள்ளது.

சென்ற 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தியா நடத்திய தாக்குதலில் லாகூர் நகரைப் பாதுகாக்க பாகிஸ்தான் இராணுவம் பல வியூகங்களை வகுக்க ஆரம்பித்துள்ளது. பாகிஸ்தான் இராணுவம் ஏவிய சீனத் தயாரிப்பான 'எச். க்யூ. 9 பி' ஏவுகணை தடுப்பு ஆயுதங்களை தாக்கி அழித்துள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது. சீனத் தயாரிப்பு ஏவுகணைகளை இந்தியா தடுத்து அழித்தமை தொடர்பாக தற்போது உலக அரங்கில் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன. இது பரபரப்பான தகவல் என்று இந்திய ஊடகங்கள் கூறுகின்றன.

ஜம்மு விமான நிலையம், சம்பா, ஆர்.எஸ். புரா, ஆர்னியா உள்ளிட்ட பகுதிகளை நோக்கி பாகிஸ்தானில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கிருந்து ஏவப்பட்ட சீனத் தயாரிப்பின் 8 ஏவுகணைகளையும் இந்திய இராணுவம் தடுத்து 'எஸ்400 சுதர்சன் சக்ரா' தடுப்பு மையங்கள் முறியடித்தன. இதையடுத்து இந்தியா மீது மீண்டும் வியாழக்கிழமை இரவு பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியிருக்கிறது. வெள்ளிக்கிழமை அதிகாலை வரை கடும் மோதல் ஏற்பட்டது. பாகிஸ்தான் இராணுவம் ஏவிய 7 ஏவுகணைகள் தடுக்கப்பட்டுள்ளன. பஞ்சாப் மாநிலம், பதான்கோட் விமானத் தளத்தில் தாக்குதல் நடத்த முற்பட்ட நிலையில், இந்திய விமானப்படை பதில் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தியாவின் இந்தத் தாக்குதல் குறித்து வெள்ளிக்கிழமை இரவு கருத்து வெளியிட்ட அமெரிக்க பென்டகனின் முன்னாள் அதிகாரி மைக்கேல் ரூபின், இந்திய இராணுவத்தைப் பாராட்டியிருக்கிறார். நன்கு திட்டமிட்டு இந்தியா தாக்கியுள்ளதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தான் ஏவிய ஏவுகணைகளை அழிக்க இந்திய இராணுவம் பயன்படுத்திய 'எஸ்400 சுதர்சன் சக்ரா' என்ற ஏவுகணை ரஷ்யத் தயாரிப்பா என்று சர்வதேச ஊடகங்கள் கேள்வி எழுப்பியுள்ள நிலையில், அமெரிக்கப் பென்டகனின் முன்னாள் அதிகாரி பாராட்டியிருக்கிறார்.

இந்தப் பின்னணியில்தான் சீனாவின் 'எச்.க்யூ 9 பி' என்பது என்ன என்பது பற்றியும் அதனை இந்திய இராணுவம் அழித்தது ஏன் என்ற கேள்விகள், விமர்சனங்கள் தற்போது முன்வைக்கப்படுகின்றன. சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் அதிக அளவு சக்திவாய்ந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்கிறது.

போர் விமானங்கள், ஏவுகணை தடுப்பு ஏவுகணை ஆயுதங்கள் உள்ளிட்ட பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து ஆயுதங்களையும் சீனாவிடம் இருந்து பாகிஸ்தான் கொள்வனவு செய்வதாக இந்திய ஊடகங்கள் கூறுகின்றன. சீனாவில் 'எச்.க்யூ. 9' வான்வெளிப் பாதுகாப்பு முறைமை (H.Q 9 Air Defence System) பயன்பாட்டில் உள்ளது. இதனை தமக்கு வழங்குமாறு பாகிஸ்தான் சீனாவிடம் கோரியது. இதன் காரணத்தால் சீனா பாகிஸ்தானுக்கு என்றே தனியாக ஒன்றை தயாரித்து வழங்கியுள்ளது. அதன் பெயர்' எச்.க்யூ. 9பி' வான்வெளி பாதுகாப்பு முறைமை என்பதாகும்.

இதில் 'பி' என்பது பாகிஸ்தானை குறிக்கும். சீனாவில் பயன்படுத்தும் இந்த ஆயுதத்தில் அந்த 'பி' என்ற எழுத்து இல்லை. இந்நிலையில்தான் லாகூரை பாதுகாக்கும் வகையில் பாகிஸ்தான் சீனாவின் 'எச்.க்யூ. 9 பி' வான் பாதுகாப்பு முறைமையை நிறுவி இருந்தது. இதனை பாகிஸ்தான் கடந்த 2021ஆம் ஆண்டில் இருந்து பயன்படுத்திவருகிறது.

இது வானில் 125 கிலோமீற்றர் தொலை தூரத்தைக்கொண்டது. இது போர் விமானங்கள், குரூஸ் வகை ஏவுகணைகள் போன்றவற்றை 100 கிலோ மீற்றர் தூரத்திலேயே கண்டுபிடித்து அழிக்கும் வல்லமை கொண்டது. ஆனால் பாகிஸ்தான் ஏவிய ஏவுகணையை, இந்திய இராணுவம் தாக்கி அழித்தமை தொடர்பாக இந்திய ஊடகங்கள் பாராட்டும் கருத்துகளை முன்வைக்கின்றன.

அதேவேளை 'எச்.க்யூ. 9 பி' வான்பாதுகாப்பு மூலமான தாக்குதல் முறைமையை, பதில் தாக்குதல் நடத்தி அழிக்க இந்திய இராணுவம் பயன்படுத்திய ட்ரோன் இஸ்ரேல் தயாரிப்பு என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேல் நாட்டின் ட்ரோன் தான், பாகிஸ்தான் ஏவிய சீனத் தயாரிப்பு ஏவுகணைகளை நேர்த்தியாகத் தாக்கி அழித்தது என்று இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் விக்ரம் மிஸ்ரி உறுதிசெய்திருக்கிறார்.

இஸ்ரேல் தயாரிப்புகளைப் பயன்படுத்தியே வியாழக்கிழமை இரவும் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்று விக்ரம் மிஸ்ரியை மேற்கோள் காண்பித்து இந்திய ஆங்கில ஊடகங்கள் வெள்ளிக்கிழமை செய்தி வெளியிட்டிருக்கின்றன.

இந்தியா பயன்படுத்திய ட்ரோன் என்பது இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் என்ற ஆயுத உற்பத்தி நிறுவனம் உருவாக்கியதாகும். ரேடார் மற்றும் வான்வெளிப் பாதுகாப்பு முறைகளை துல்லியமாக தாக்குவதுதான் இதன் சிறப்பாகும். இந்த ட்ரோன் 9 மணிநேரம் வரை இடைவிடாது பறக்கக் கூடியது என்று இந்திய இராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேநேரம் பலுசிஸ் தேசிய இன விடுதலை போராளிகள் பாகிஸ்தான் இராணுவம் மீது தாக்குதல்களைத் தொடர்ந்துள்ளனர் என்றும், இதற்கு இந்தியா பின்னணி எனவும் பாகிஸ்தான் ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன. காஷ்மீர் போராளிகள் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்திய தாக்குதலுக்கும் பாகிஸ்தானுக்கும் தொடர்பு இல்லை எனவும், பலுசிஸ் போராளிகளை பாகிஸ்தானுக்கு எதிராக தூண்டிவிடவே, இந்தியா, பாகிஸ்தான் மீது குற்றம் சுமத்தி உள்ளதாகவும் அந்த ஊடகங்கள் விமர்சிக்கின்றன. புவிசார் அரசியல் பொருளாதார நோக்கில் அமெரிக்க, இந்திய மற்றும் இஸ்ரேல் உறவும், சீன பாகிஸ்தான் உறவும் இந்த மோதல் மூலம் வெளிப்பட்டுள்ளது. அதேநேரம் இந்திய - ரஷ்ய உறவும் இராணுவத் தளபாடங்கள் பரிமாற்றமும் வெளிப்பட்டுள்ளன.

## சமகால போட்டித் தன்மையை ஆழமாக ஆராயும் அநுர

ஆனால் டொனால்ட் ட்ரம்ப் மறைமுக ரஷ்ய சார்புத் தன்மையுடன் செயற்படுவதால், இந்தியாவுக்கு தற்போதைக்கு பாதுகாப்பானதாகவே இருக்கும். இந்த நிலைமை இலங்கைக்கும் சாதகமானதே.

பலுசிஸ் தேசிய இன விடுதலைப் போராளிகளுக்கு இந்தியா ஆதரவு வழங்கும் பின்னணிகள் மற்றும் பாகிஸ்தான் மீதான குற்றச்சாட்டுகள் பற்றி மஹிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக் காலத்தில் இலங்கை இராஜதந்திரிகள் ஆய்வு நடத்தி இருந்ததை தமிழ்த் தரப்பு கவனத்தில் எடுக்க வேண்டும். தற்போதைய அநுர அரசாங்கமும் அமெரிக்க இந்திய உறவு மற்றும் சீன உறவுகளை பயன்படுத்தும் உத்திகள் கூட, சமகால புவிசார் அரசியல் பொருளாதார நிலைமைகளை ஆழமாக அறிந்து காய்நகர்த்துகின்றது.

காஷ்மீரில் சுற்றுலாப் பயணிகள் மீது நடத்திய தாக்குதலை கண்டித்தும், மோடிக்கு அனுதாபம் தெரிவித்து அநுர அனுப்பிய அனுதாபச் செய்தியின் உள்ளடக்கமும் முக்கியமானது. சீன - இலங்கை உறவு தற்போதைக்கு தூரத்தில் என்றே தெரிகிறது.



# சிக்கலாக மாறும் 'சிக்கன்குனியா'!

திருமதி யானுதி தர்சன்
விரிவுரையாளர்
தாதியியல் பிரிவு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

நாடெங்கும் மீண்டும் சிக்கன்குனியா பரவத்தொடங்கியிருக்கிறது. சிக்கன்குனியா என்பது நுளம்பால் பரப்பப்படும் ஒருவகை நோயாகும். இலங்கையில் இந்த நோயானது முதன்முதலாக 1960 ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டது. அதன் பின்னர் இந்த நோய்த்தொற்றாளர்கள் 2006 ஆம் ஆண்டில் , கிட்டத்தட்ட 40 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் இனங்காணப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாக 2006,2007 மற்றும் 2008ஆம் ஆண்டுகளிலும் அண்ணளவாக 40,000 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டார்கள்.

இந்நோய்ப்பரம்பலானது தொற்றுக்குள்ளான பெண் நுளம்புகள் மனித உடலைக் கடிக்கும் போது நுளம்பிலிருந்து நோய்க்கிருமி மனிதனுக்குப் பரவுகின்றது. பெரும்பாலும் இந்த நோய்க்கான நோய்க்காவிகளாக 'Aedes aegypti' மற்றும் 'Aedes albopictus' ஆகிய நுளம்புகள் காணப்படுகின்றன. இந்நுளம்புகளாலேயே டெங்கு நோயும் மனிதனுக்குப் பரப்பப்படுகின்றது. இந்நுளம்புகள் நாள் முழுவதும் கடிக்கும் எனினும் இதன் நடமாட்டம் அதிகாலையிலும் மாலையிலுமே அதிகமாக காணப்படுகிறது. இந் நுளம்புகள் கடித்து 4 முதல் 8 நாள்களின் பின்னரே நோயறிகுறிகள் தென்பட ஆரம்பிக்கும். கருவுற்ற தாயிலிருந்து சிசுவுக்கு நோய்த்தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறும் காணப்படுகிறது. இந்த நோய்க்கிருமி ஒருவகை ஆர்.என்.ஏ (RNA )வைரஸ் வகையைச் சார்ந்தது. இந் நோய்க்கிருமிக்கான தேக்கங்களாக மனிதன் மற்றும் ஏனைய முள்ளந்தண்டுள்ள உயிரினங்களான குரங்குகள், எலிகள், பறவைகள் மற்றும் சிறிய முலையூட்டிகள் காணப்படுகின்றன.

இந்நோயின் அறிகுறிகளாக சடுதியான காய்ச்சலுடன் கூடிய நடுக்கம், மூட்டுநோ அல்லது மூட்டுக்களில் வீக்கம் குறிப்பாக சிறிய மூட்டுக்கள் ( மணிக்கட்டு, கை, கணுக்கால், பாதம்), சிவப்புப் புள்ளிகள் தோன்றுதல், தசைநோ, தலையிடி, சோர்வு மற்றும் குமட்டல் ஆகியன காணப்படுகின்றன. இந்நோயிலிருந்து முழுமையாக விடுபடமுடியும். சில நேரங்களில் கைக்குழந்தைகள் மற்றும் சிறுவர்களிடையே இதன் தாக்கம் அதிகமாகக் காணப்பட்டு இறப்பும் ஏற்படலாம். இரத்தப்பரிசோதனை மூலமும் எலைஸா ( ELISA) எனப்படும் தனித்துவமான வைரசுக்கான பரிசோதனைகள்மூலம் இந்நோயை உறுதிப்படுத்தமுடியும். சிக்கன்குனியா நோய்க்கு தனித்துவமான வைரஸ்க்கொல்லிமருந்துகள் எதுவுமில்லை. நோய் அறிகுறிகளுக்கான சிகிச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. காய்ச்சலுக்கு பரசிடமோல்/பனடோல் வழங்கப்படுகிறது. இதைவிட ஏனைய 'NSAID' மருந்துகள் கொடுப்பதை இக்காலப்பகுதியில் தவிர்ப்பது நல்லது. போதியளவான நீராகாரங்கள் வழங்கப்படவேண்டும். போதியளவான நித்திரை மற்றும் சிறிய உடற்பயிற்சிகளால் சிறிய மூட்டுகளில் ஏற்படும் நோவைக் குறைக்கமுடியும்.

### பாதுகாக்கும் வழிமுறைகள்

1. நுளம்புக்கடியில் இருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.
2. தொற்றுக்குள்ளானவரை நுளம்புக்கடியில் இருந்து பாதுகாப்பதன்மூலம் ஏனைய குடும்ப அங்கத்தவருக்கு இந்நோய் பரவுவதைத் தடுக்கமுடியும். குறிப்பாக நோய் அறிகுறி ஏற்பட்டு ஒரு வாரத்துக்குள் அந்நோயாளிக்கு நுளம்பு கடிப்பதைத் தடுக்கவேண்டும். இதன் மூலம் நோய்ப்பரம்பலைத் தடுக்கலாம்.
3. நுளம்பு பெருகும் இடங்களை இல்லாதொழிக்க வேண்டும். வீட்டில் ஒவ்வொரு கிழமையும் நீர் தேங்கும் இடங்களைப் பரிசோதித்து நீர்தேங்கி நிற்காதபடி செய்யவேண்டும்./நீர் தேங்கும் இடங்களைத் துப்புரவாக வைத்திருக்க வேண்டும்.
4. வீடுகளில் தேங்கும் கழிவுகள்/ குப்பைகளை உரிய முறைப்படி அகற்றவேண்டும்.
5. உடலை மூடி ஆடைகளை அணியவேண்டும். குறிப்பாக சிறுபிள்ளைகளெனில் நீளக்காற்சட்டை/ பாவாடை மற்றும் நீளக்கைச்சட்டை அணியவேண்டும். உடலை மூடி உடை அணியும் போது நுளம்புகள் கடிப்பதற்கான சாத்தியம் குறைவு.
6. வீட்டுக்குள் நுளம்புகள் வரும் வழிகளான கதவுகள் மற்றும் ஜன்னல்களை நுளம்புகள் அதிகளவில் நடமாடும் நேரங்களில் மூடிவைத்திருக்க வேண்டும்.
7. நுளம்பு வலைகள் பாவித்தல். (முக்கியமாக குழந்தைகள், சிறுவர்கள், நோய்த் தொற்றுக்குட்பட்டவர்கள் மற்றும் பெரியவர்கள்)
8. நுளம்பு விரட்டி மருந்துகள் (mosquito repellent) பாவித்தல்.



# வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு...



"எங்கடை சனத்தின்ரை விருப்பு வெறுப்பை என்னெண்டு அறிஞ்சுகொள்ளுறது கஷ்டம் அண்ணை. அதுக்கெண்டு தனியாப் படிக்கவேணும்" எண்டு தேர்தலிலை வெண்ட ஒரு தம்பி நேற்றைக்குக் கதைக்கேக்க சொன்னார்.

"ஏன்ரா தம்பி அப்பிடிச் சொல்லுறாய் ?" எண்டு கேட்டன். "ஒரு இடத்திலை ஒரு மாதிரி வோட்டைப் போட்டிருக்கினம். கட்சியள் கலந்து பகிர்ந்தெல்லே வந்திருக்கு. கட்சிச் செல்வாக்கும் இருக்கு, அதே நேரம் சொந்தச் செல்வாக்கும் வேலை செய்திருக்கு" எண்டு ஒரு போடு போட்டான்.

உதுதான் சொல்லுறது உவைக்கு இன்னும் அனுபவம் வரேல்லை எண்டு. ஜனாதிபதித் தேர்தலிலை ஒரு மாதிரி, நாடாளுமன்றத் தேர்தலிலை இன்னும் ஒரு மாதிரி வாக்களிக்கிற சனம் உள்ளூராட்சித் தேர்தலிலை வித்தியாசமா வாக்களிப்பினம் எண்டதை விளங்கிக் கொள்ளோணும். இதிலை கட்சியின்ரை கொள்கை, செயற்பாடு, தேசியம் எண்டதுக்கு அப்பாலை எலக்சன் கேக்கிற தனிமனுசனுக்கு எண்டு ஒரு வாக்கிருக்கு. அது அவற்றை செல்வாக்கு. அதிலையும் விசயம் இருக்கு. அதுக்கெண்டு ஒரு பார்வை சனத்திட்டை இருக்கு. உள்ளூராட்சித் தேர்தல் எண்டது வாழ்க்கையோடு பின்னிப் பிணைஞ்ச அலுவல். இரவிலை றோட்டு லைற் சரியா எரியவேணும். வீட்டுக்கு முன்னாலை குப்பை சேரப்பிடாது. காணி பூமி மற்றது எல்லைப் பிரச்சினை, கழிவுப்பிரச்சினை எண்டு நாளாந்த சீவியத்தோடை சேர்ந்ததெல்லாத்தையும் கவனிக்கிற நிறுவனந்தான் உள்ளூராட்சி சபை. அதாலை அதுகளை நேர்த்தியாச் செய்யிற ஆக்களுக்குத்தான் முதலிடம் குடுக்கோணும். ஒரு புதுக் கட்சிக்காரரிட்டைக் கேட்டன் "தம்பி சில இடங்களிலை நீங்கள் போட்ட ஆக்கள் சரியில்லையாம்" எண்டு. அவர் உடனை சொன்னார் "அண்ணை உங்களைப் போட்டால் நீங்கள் வந்திருப்பியளோ? இல்லையெல்லே! அவங்கள்தான் ஓம் எண்டு வாறாங்கள். என்ன செய்யிறது?" அதுக்கு நான் , "தம்பி இஞ்சையுள்ளவை படிச்சவை. நீங்கள் ஒரு ஆளைப்போடேக்கை சனம் அவையின்ரை நிறை குறை எல்லாத்தையும் பாக்கும். இது சந்தியிலை நிண்டவையைக் கொண்டு வந்து இவர்தான் உங்கட பிரதிநிதி எண்டு காட்டினால் சனம் ஒத்துக் கொள்ளுமோ? எங்கடை சனம் ஒரு கலியாணப் பேச்சு மாதிரித்தான் எல்லாத்தையும் பாக்கும். சில நேரம் மூண்டு நாலு தலைமுறை பாத்துத்தான் ஓமெண்டுவினம். அப்ப கண்டகண்டவையளைச் சனம் ஏற்காது எண்ட விசயம் தெரியவேணும்" எண்டு சொன்னன்.



## அவசரமா ஒரு கடுதாசி

சரி இப்ப விசயத்துக்கு வருவம். போனமுறை சபையைக் கலைச்சாப் பிறகு அங்க இருந்த அதிகாரியள் பல எல்லாத்தையும் குழப்பியடிச்சு கூழாம்பாணி மாதிரி வைச்சிருக்கினமாம். அதுகளை எல்லாம் புதுசா தெரிவான மெம்பர்மார்தான் நேராக்கவேணும். ஒரு அலுவலுக்கு உள்ளூராட்சிசபையளுக்குப் போனால் சனத்தை இழுத்தடிச்சு அலையப் பண்ணி நொந்து நூலாக்கிப் போட்டு விட்டுக்கொண்டு இருக்கினமாம். றோட்டு லைற்றுகள் சீரா இல்லை. லைற் எரியேல்லை எண்டு ஆரேன் முறைப்பாடு சொன்னால் , "லை ற்றை வேண்டிக்கொண்டு வாங்கோ , போட்டு விடுறம்" எண்டு நக்கல் கதை. கண்ட கண்ட இடத்திலை வியாபாரம் செய்ய அனுமதி குடுக்கினம், றோட்டுக்கரையிலை வியாபாரம் செய்யிறதைக் கண்டு கொள்ளமாட்டினம், ஆரேன் அறிவிச்சாலும் காணாமல் விட்டிடுவினம். அதாலை வாகனப் போக்குவரத்துக்கு நெருக்கடி. சனத்துக்கு இடைஞ்சல். அதோட சனத்துக்குச் சேவை செய்யிற மனப்பான்மை பெரும்பாலான சபையளில வேலை செய்யிற ஆக்களுக்கு இல்லை. ஆனபடியால் இனி புது மெம்பர்மாருக்கு கனக்க வேலை இருக்கு. ஏதோ செய்வியள் எண்டு எதிர்பார்க்கிறம். செய்வியள்தானே?????

இப்படிக்கு
அப்பாவி அன்னமுத்து



# மறுக்கப்படும் மனிதம்; மறைக்கப்படும் சாவுகள்!



O லக்ஷனா

இலங்கை ஒரு ஜனநாயக நாடுதான். ஆனால் நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து பல ஆண்டுகளாகவே மனித உரிமை அமைப்புகள் கேள்விகளை எழுப்புகின்றன. சிறைக்கைதி கள், குறிப்பாக தமிழர்கள் நீதியற்ற முறைகளில் சிறையிலடைக்கப்படுவதும், அவர்களது அடிப்படை உரிமைகள் நிராகரிக்கப்படுவதும் தொடர்கதைதான். கடந்த காலங்களில் தமிழ் இனத்தைக் குறிவைத்து செய்யப்பட்ட அடக்குமுறைகள், நீண்ட காலத் தடுப்புக்காவல்கள், விசாரணையின்றி சிறையில் வைப்பது, மற்றும் வன்முறைகளின் வழியாக மிரட்டல்கள் என்பவற்றுக்கு இன்னமும் நீதியென்பது கிடைக்கவேயில்லை.

சிறைக்கைதிகளுக்கு வழங்கப்படவேண்டிய அடிப்படை வசதிகளான தூங்கும் இடம், உணவு, சுகாதாரம் போன்றவை மிக மோசமான நிலையில் உள்ளன. நோயுற்ற கைதிகளுக்கான உடனடி மருத்துவ உதவி மறுக்கப்படுகின்றன, உடற்தாக்கங்கள் மற்றும் மன அழுத்தங்களுக்கு சிறைக்கைதிகள் உள்ளாகின்றனர். பல கைதிகள் தங்கள் விருப்பப்படி சட்டத்தரணிகளைத் தேர்ந்தெடுக்கமுடியாமல், அல்லது வழக்கறிஞரைச் சந்திக்க அனுமதி இல்லாமல் இருக்கின்றனர். இது அவர்களது சட்ட உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும்.

கைதிகள் விசாரணைகளின்போது உடல்ரீதியாகத் துன்புறுத்தப்படுகிறார்கள் என்ற புகார் எப்போதும் இருக்கவே செய்கின்றது. மன அழுத்தம், நீண்ட நேரம் தூக்கம் இன்றி வைக்கப்படுதல், அடித்தல், சித்திரவதை செய்வதன் மூலம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுதல் போன்ற செயல்கள் மனித உரிமைக்கு எதிரானவை. இலங்கையின் பல சிறைகளில் கைதிகளுக்குத் தேவையான உணவு, சுகாதார வசதிகள், மருத்துவ உதவிகள் போதுமான அளவில் இல்லை. நோய்கள் பரவுவதும், உடல் மற்றும் மனவளர்ச்சி பாதிக்கப்படுவதும் அடிக்கடி நடைபெறுகின்றன.

பல சிறைக்கைதிகள் நீண்டகாலம் வழக்கு நடக்காமல் சிறையில் இருப்பது வழக்கமான நிலையாக உள்ளது. இது சட்டத்தின்கீழ் ஒருவர் குற்றவாளி என்று நிரூபிக்கப்படாவிட்டால், அவரைச் சிறையில் வைக்கக்கூடாது என்ற அடிப்படை நியாயத்துக்கு மாறானதாகும். இலங்கையின் " பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்"(Prevention of Terrorism Act PTA) என்பது, எந்தவொரு குற்றச்சாட்டும் நியாயமான சாட்சியங்களும் இல்லாமல் ஒருவரைப் பிடித்து சிறையில் வைக்க அனுமதிக்கின்றது. இது அடிப்படையான மனித உரிமை நெறிமுறைகளுக்கு மாறானது. பல தமிழ் இளைஞர்கள் இதன் கீழ் விசாரணையின்றி பல வருடங்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். போர்க்காலங்களில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் இன்றுவரை சிறைப்பறவைகளாக தமக்கான விடுதலை எப்போது என்பதே தெரியாமல் வாடுகின்றனர். இது நீதியின் பெயரில் நடைபெறும் இனவெறிச் செயல்களின் பிரதிபலிப்பே. இவ்வாறான முறைகேடான விடயங்கள் தொடர்கின்ற நிலைமையில், அண்மையில் வெலிக்கடைச் சிறைச்சாலையில் இடம்பெற்ற ஒரு சம்பவம் மீண்டும் கைதிகளின் பாதுகாப்பைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது. வெலிக்கடைக் காவல் நிலையத்தில்2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் திகதி 25 வயதான இளைஞரான சத்சரா நிமேஷி என்பவர் கைதுசெய்யப்பட்டிருந்தார். அவர் ஏப்ரல் 2இல், முல்லெரியாவா தேசிய மனநோய் நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட பின்னர் மரணமடைந்துவிட்டார் என்று பொலிஸாரால் அறிவிக்கப்பட்டது. ஆனால் மரணமடைந்த நபரின் குடும்பத்தார், அவர் மரணத்துக்கு முன்னால் கடும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், அதனாலேயே அவர் மரணமானார் என்றும் குற்றஞ்சாட்டுகின்ற னர். நுகேகொடப் பொலிஸாரால் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகள் மேற்கொள்ளப்படுமென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க உறுதியளித்துள்ளார். ஆனால் இந்த விசாரணைகள் எவ்வளவுதூரம் நேர்மையாக மேற்கொள்ளப்படும் என்பதும் சந்தேகமே.

இந்த மரணத்தால் எழுந்த சர்ச்சைகள் அடங்கமுன்னரே இன்னொரு சிறைக்கைதியின் மரணமும் நடந்துள்ளது. இந்த மரணம் நடந்த இடம் பூசா அதி பாதுகாப்புச்சிறை. அங்கு 2022 ஆம் ஆண்டுமுதல் காவலில் இருந்த 46 வயதான நபர் ஒருவர் ஏப்ரல் 4 ஆம் திகதி வெட்டுக் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தாரெனத் தெரிவிக்கப்பட்டது.

கைதிகள் உரிமைகளைப் பாதுகாக்கும் குழுவின் செயலாளர் செனெகா பெரேரா, "இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறையிலிருந்த அதிகாரிகள்மூலம் கைதியின் மரணம் குறித்த விசாரணைகள் நடத்தப்படக்கூடாது, ஏனெனில் சிறைக்காவலர்கள் குற்றவாளிகளுடன் தொடர்புகொண்டிருக்க வாய்ப்பு உண்டு என்பதால், அவ்வாறு விசாரணை நடத்துவது அதன் நேர்மைத்தன்மையைக் கேள்விக்குட்படுத்தும்" எனக் கூறினார்.

> போர்க்காலங்களில் கைதுசெய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் இன்றுவரை சிறைப்பறவைகளாக தமக்கான விடுதலை எப்போது என்பதே தெரியாமல் வாடுகின்றனர். இது நீதியின் பெயரில் நடைபெறும் இனவெறிச் செயல்களின் பிரதிபலிப்பே.

இப்படி சிறைக்கைதிகள் மர்மமான முறையில் மரணிப்பது இலங்கையில் ஒரு தொடர்கதையாகவே உள்ளது. அப்படிச் சிறைகளில் மரணிப்பவர்களுக்கு நீதியும் கிடைப்பதில்லை. இதற்கு மிகச்சிறந்த உதாரணம் விஷ்வலிங்கம் கோபிதாஸ்.

பிரிட்டனுக்கும் புலம்பெயர்ந்து வசித்து வந்த தமிழரான விஷ்வலிங்கம் கோபிதாஸ் 2007 ஆம் ஆண்டு, கட்டுநாயாக்க விமானநிலையப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். கோபிதாஸ் 2007 முதல் 5 ஆண்டுகள் இலங்கையின் மோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் எந்தக் குற்றச்சாட்டும் இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பின்னர் விடுதலைப்புலிகளை ஆதரித்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டார். ஆனால் 2014 ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் அவர் மர்மமான முறையில் உயிரிழந்தார். எனினும் உடல்நிலைப் பாதிப்பாலேயே (மாரடைப்பால்) உயிரிழந்திருந்தார் என்று சிறைச்சாலைத் தரப்பால் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து கோபிதாஸின் நண்பர்களான முன்னாள் அமைச்சர் மனோ கணேசனும், இறந்தவரின் குடும்பத்தினரும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிட்டனர்.

இதுகுறித்த செய்திகள் உதயன் உள்ளிட்ட ஊடகங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தன. அவரது சாவுக்கு நீதிகோரி அரசியற்கட்சிகளால் போராட்டங்களும் நடத்தப்பட்டிருந்தன. ஆனால் கோபிதாஸ் ஏன் இறந்தார் என்றோ, அவரது சாவில் மர்மமங்கள் குறித்தோ இதுவரை எந்த விசாரணையும் நடத்தப்படவுமில்லை, அவரது சாவுக்கு நீதி கிடைக்கவுமில்லை.

இனியும் இதுபோன்ற சிறைச்சாவுகள் தொடராதிருக்க உரிய சட்டங்கள் கொண்டுவரப்படவேண்டும். கைதிகள் இறந்தால் , அதுகுறித்த விசாரணைகள் மூன்றாம் தரப்பால் பக்கச்சார்பற்றவகையில் துரிதமாக நடத்தப்பட்டு, உண்மைகள் பகிரங்கப்படுத்தப்படவேண்டும். ஒருவேளை கைதிகளின் சாவுக்கு பொலிஸாரோ வேறுநபர்களோ காரணம் என விசாரணைகளில் கண்டறியப்பட்டால், அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் சிறைச்சாலைச் சாவுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கமுடியும்.

# பண்டைய தமிழ் இலக்கியங்களில் புத்தபெருமானின் போதனைகள்

பேராசிரியர் சிவேசன் சிவானந்தமூர்த்தி
நிகழ்ச்சிதிட்டத் தலைவர்,
சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்,
முகாமைத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , இலங்கை.

04



சங்க இலக்கியங்களில் புறநானூறு, அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை போன்றவற்றில் பௌத்தம் பற்றிய கருத்துகள் உள்ளன. சங்ககாலத்துக்குப் பின்னரான காப்பிய காலத்தில் ஐம்பெரும் காப்பியங்களுள் மணிமேகலையும், குண்டலகேசியும் முழுமையான பௌத்த காவியங்கள். தமிழிலுள்ள இலக்கிய நூல்களில் முதல் உருவாக்கப்பட்ட மதச்சார்பான நூல் மணிமேகலை. இந்நூல் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்ற பௌத்த மதத்தினைப் பின்பற்றியவரினால் எழுதப்பட்டதனால் இந்த நூலில் பௌத்த தத்துவங்களின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது.

இக் காப்பியத்தின் வாயிலாக அக்கால சமூகத்தினை அதிகம் பதிப்புக்குள்ளாக்கிய சமூக விரோதச் செயற்பாடுகளினை அகற்றுவதற்கும் வலுக்குன்றச் செய்வதற்கும் பௌத்த தத்துவங்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்பட்டமையினை அவதானிக்கலாம். மணிமேகலை எனும் காவியத்தின் மூலம் பசியொழிப்பு, மதுவொழிப்பு, பரத்தையொழிப்பு, சாதியொழிப்பு, மற்றும் சிறையொழிப்பு போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. மணிமேகலை எனும் பௌத்த காவியப் பாத்திரம் சித்தாந்தங்களின் வாயிலாக சமூகப் புரட்சியினை எற்படுத்துகின்ற ஓர் உணர்வுபூர்வமான உன்னதமான காப்பியமாகும்.

நாதகுத்தனாரினால் விருத்தப்பா முறையில் எழுதப்பட்ட குண்டலகேசி வடநாட்டில் வாழ்ந்த பௌத்த துறவியினைப் பற்றியது. இந் நூலானது வணிக மரபில் தோன்றிய பத்தரை, காளன் என்பவர்களை கதாநாயகர்களாகக் கொண்டமைந்து வாழ்வியல் யாதார்த்தங்களினை போதனை செய்வதாக அமைந்துள்ளது. அதேபோல் தமிழில் உள்ள முழுமைத்துவம் வாய்ந்த இலக்கண நூலான வீரசோழியம் 11 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்தமித்திரன் என்ற பௌத்த துறவியினால் எழுதப்பட்டது. இந்நூல் மொழி ஒன்றின் இலக்கணம் கொண்டிருக்கவேண்டிய ஐந்து பிரதானமான அம்சங்களான "சொல், பொருள், யாப்பு, அலங்காரம், எழுத்து" என்பனவற்றை முழுமையாக உள்வாங்கியிருப்பதனால் தனிச்சிறப்புமிக்கதாய் அமைகின்றது. இதற்கு முன்னரான நூலான தொல்காப்பியம் பொருள், சொல் மற்றும் எழுத்து எனும் மூன்று அம்சங்களினை மட்டும் உள்வாங்கியதாக அமைந்திருக்கிறது. இன்னுமோர் இலக்கண நூலான தண்டியலங்காரம் அணி நயத்தினைச் சிறப்பிக்கும் நூலாக அமைந்திருந்தது. இவற்றினை நோக்குகையில் பௌத்த தத்துவத்தின் பிரதிபலிப்புகள் நிறைந்த தமிழ் இலக்கியங்களும் இலக்கணங்களும் தமிழில் அதிகமாகக் காணப்படுவது புலப்படுகிறது.

தமிழர்கள் பௌத்த சித்தாந்தங்களின்பால் ஈர்க்கப்பட்டு கௌதமரைப் பின்பற்றியமைக்குப் பல சான்றுகள் இலக்கண நூல்கள் வழியிலும் காணப்படுகின்றன. மேலும் ஐம்பெரும்காப்பியங்களில் குடிமக்கள் காப்பியம் என அழைக்கப்படும் சிலப்பதிகாரத்தில் இளங்கோ அடிகள் புகார் காண்டத்தில் இந்திரவிழா ஊர் எடுத்த காதை எனும் பகுதியில் புகார் நகரத்தின் சிறப்பையும் அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கைமுறையையும் அவர்களினால் கொண்டாடப்பட்ட இந்திரவிழாவையும் சிறப்பித்துக்கூறிய வேளையில் பௌத்தமும், சமணப்பள்ளிகளும் அங்கிருந்தன என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு இந்திர விழா ஊர் எடுத்த காதையில் உள்ள பின்வரும் வரிகள் சான்றுபகிர்கின்றன.

அறவோர் பள்ளியும், அறன் ஓம் படையும்,
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்,
திறவோர் உரைக்குஞ் செயல்சிறந்து ஒருபால்

(சிலப்பு 179–181)

இக்கட்டுரையில் முன்னர் குறிப்பிட்டதுபோல் "கடவுள் பள்ளி" என மதுரைக்காஞ்சியில் வருகின்ற சொல்லுக்கு அந்த நூலுக்கு உரை எழுதியவர்களில் முதன்மையானவர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர் "பௌத்தப்பள்ளி" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் மேலே உள்ள சிலப்பதிகார வரியில் வருகின்ற அறவோர் பள்ளி என்பதற்கு சிலப்பதிகார உரை ஆசிரியர் அடியார்க்கு நல்லார் உரை எழுதும்போது பௌத்த மற்றும் அருகர் பள்ளி எனக் குறிப்பிடுகிறார். அடியார்க்கு நல்லாரின் உரைவழி நோக்குகையில் காப்பிய காலத்தில் புறசமயம் என விழிக்கப்பட்ட பௌத்தமும் சமணமும் அங்கு நிறுவன மயப்படுத்தப்பட்டு காணப்பட்டன என்பதும் பெறப்படுகின்றது.

சிலப்பதிகாரக் காலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தமக்கிடையே சிறந்த புரிந்துணர்வுடன் சமயங்கள் போதிக்கின்ற மார்க்கங்களினால் தமக்கிடையே பேதங்களினை உருவாக்கிக் கொள்ளாது, தம் உணர்வுகளுக்கான அங்கீகாரத்தினைத் தேடுகின்ற அதேவேளை பிறரின் உணர்வுகளினையும் மதிப்பவர்களாகக் காணப்பட்டனர். அக்காலத்தில் வாழ்ந்த மக்கள் மதம் பற்றிய தெளிவான புரிதலைக் கொண்டிருந்தனர்.

அதாவது மதம் என்பதை இறைவனிடம் சாரணாகதி அடைவதற்கான மார்க்கத்தினை வெளிப்படுத்துகின்ற ஊடகமாக நோக்குகின்ற பண்பட்ட மனோபாவத்தினைக் கொண்ட மக்கள் வாழ்ந்தனர் என்பது புலப்படுகின்றது. இதன் மூலம் நல்லிணக்கம் மேலோங்கியும் அதன்வழி, சமூக ஒற்றுமைகள் நிறைந்ததாகவும், சமூக பிறழ்வுகள் குறைந்ததுமான மானிட சமூகம் ஒன்று சிலப்பதிகார காலத்தில் காணப்பட்டது. இதற்குச் சான்றாக புகார் நகரில் கொண்டாடிய இந்திர விழா சாட்சியமாகின்றது.

சமூகத்தில் எடுக்கப்படுகின்ற விழாக்கள் சமூக, சமய எல்லைகளினைத் தாண்டியதாகக் காணப்படுகின்றன. இதற்கு இந்திரவிழா விதிவிலக்கு அல்ல. மேலும் சிலப்பதிகாரத்தில் நாடுகாண் காதையின் பின்வரும் பாடல்வரிகளூடாக பௌத்த மதத்தினைப் பின்பற்றியவர்கள் வாழ்ந்தமையும் அவர்கள் போதி மரத்தினை வழிபட்டார்கள் என்பதும் புலப்படுகின்றது.

பணை ஐந்து ஓங்கிய பாசியைப் போதி
அணிதிகழ் நீழல் அறவோன் திருமொழி
அந்தர சாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர – விகாரம் ஏழ் உடன் போகி
புலன் ஊண் துறந்து பொய்யா விரதந்து
அவல நீத்து, அறிந்து அடங்கிய கொள்கை

(சிலப்பு 10:11–16)

புகார்நகரை விட்டு வெளியேறிய கண்ணகி, கோவலன், கவுந்தியடிகளும் மதுரை நோக்கிப் பயணம் செய்யும்போது வீதிகளில் கண்டு, தரிசித்த கோவில்கள் தொடர்பாகக் குறிப்பிடுகையில் பசுமையான போதி (அரச) மரத்துடன் அமைந்திருந்த பௌத்த கோவிலை மூவரும் தரிசித்துச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

*(தொடரும்)*

# உணர்ப்புதினம்

இராகவன்

பாகம் 3

கட்டைவேலி யூனியனில் இலக்கியச் சந்திப்பை முடித்துக்கொண்டு கண்ணன் குழுவினர் ஹையெஸில் இ.து.குணசிங்கத்தைச் சந்திக்க பருத்தித்துறைக்குப் புறப்பட்டனர். ரஞ்சண்ணா என்னையும், "வாவன்ரா பம்பலாப் போவம்?" எண்டு கேட்டார். நான் வீட்டிலையிருந்து சைக்கிளிலதான் யூனியனுக்குப் போனனான். நான் ஹையெஸில குசாலாய் ஏறிக் குலசிங்கம் வீட்டை போறது சரி, பிறகு ஹையெஸ் அப்படியே கொழும்புக்குப் போனால் நான் எப்பிடி யூனியனுக்குத் திரும்பிவாறது? எண்டு யோசிச்சன். அதை ரஞ்சண்ணாவிட்டயும் சொன்னன். அதுக்கு அவர், "டோன் வொறி! ஹையெஸ் இஞ்சை திரும்பிவந்துதான் கொழும்புக்குப் போகும்" எண்டார். பேந்தென்ன நானும் ஹையெஸில குசாலா ஏறி வெளிக்கிட்டன். எனக்குப் பக்கத்தில சோமிதரன் இருந்து வந்தான்.

இதில அவனைப்பற்றிக் கொஞ்சம் சொல்லவேணும். அவன் அப்ப கலைமுகம் ஆசிரியராக இருந்து ஓரிதழ் கொண்டுவந்தான். அவனுக்குப் பிறகுதான் எமில் கலைமுகம் பொறுப்பாசிரியரா வந்தவர். சோமிதரனுக்கு யாழ்.நூலகத்திலை ஒரு தனி ஈடுபாடு. அதால அவன் எடிட் பண்ணின கலைமுகம் இதழின்ர அட்டைப்படத்தில எரிந்துபோன யாழ். நூலகத்தைப் போட்டான். அதோடு என்னையுங் கண்டபாட்டுக்கு நெருக்கி ஒரு கதையையும் வாங்கி அதிலை வெளியிட்டான். "அங்க தேசத்து ஆமைகள்" எண்டது கதையின்ர தலைப்பு. பிரபாகரன் தான் படங்கீறினவர். அப்ப பிரபாகரன் அம்பலம் எண்டொரு சஞ்சிகையும் வெளியிட்டவர். அவர் த. பிரபாகரன் எண்ட தன்ர பெயரைச் சுருக்கி "தபின்" எண்டு போட்டுத்தான் படம் கீறுவார். அப்ப தெரியாதே எனக்குப் பக்குவம் இல்லை. அந்தக் கதைக்கு அவர் ஒரு படம் கீறியிருந்தார். அது ஒரு நவீன ஓவியம், அது எனக்குப் பெரிசாப் பிடிக்கேல்ல. அவர் வடிவாத்தான் கீறியிருந்தவர். ஆனால் எனக்குத்தான் அது என்னவோ கடமைக்குக் கீறினமாதிரிக் கிடந்திச்சுது.

28

ஈழத்தின் முக்கியமான நவீன ஓவியர் கோ. கைலாசநாதன் எப்பவும் சொல்லுவார், "ஓர் உருவத்தை வடிவாப் பிசகில்லாமல் வரையத் தெரிந்தவனுக்குத்தான் உருவச் சிதைப்பைச் செய்யும் தகுதியிருக்கிறது. ஆனால் ஓர் உருவத்தை ஒழுங்காக வரையத் தெரியாதவர்கள்தான் இன்றைக்கு நவீன ஓவியம் என்ற பெயரில் உருவச் சிதைப்பைச் செய்கிறார்கள்" எண்டு.

நான் ஒரு நாள் பஸ்ஸிற்குள்ள பிரபாவைச் சந்தித்த போது, "எப்பிடியண்ண நான் கீறின படம்?" எண்டு கேட்டார். நான் "பரவாயில்லை நல்லாயிருக்கு" எண்டு ஏதாவதொரு பதிலைப் பக்குவமாச் சொல்லியிருக்கலாம். ஆனால் நான், "தம்பி முதல் வடிவாய் உருவங்களைக் கீறிப்பழகு. பிறகு உருவங்களைச் சிதைக்கிற வேலையைப் பாக்கலாம். இது உனக்கு உருவங்களையே சரியாக் கீறத் தெரியேல்ல " எண்டு வெடுக்காய்ச் சொல்லிப் போட்டன். ஆளுக்கு முகமோடிக் கறுத்துப்போச்சு. இப்ப கிட்டடிலயும் பிரபா என்னிட்ட இதைச் சொல்லிப்போட்டு "அண்ணை இப்ப நீங்கள் முற்றிலும் மாறிட்டியள்" எண்டு சொன்னார். அதைக்கேட்டு எனக்கு வலு சந்தோசம்.

ஏனெண்டால் எனக்கொரு பக்குவம் வந்திட்டுது எண்டதின்ர வெளிப்பாடுதான் அவர் சொன்ன அந்த விசயம். இதிலை முக்கியமான ஒண்டைச் சொல்லோனும். ஆர் எந்தளவுக்குப் பெரியாளாய் இருந்தாலும், மெத்தப்படித்த மேதையாயிருந்தாலும், பெரிய கொம்பனாயிருந்தாலும் பக்குவம் இல்லாட்டில் அவர் சீறோதான்.

*(தொடரும்)*

# தீவ்யா




## கவிதை

தேனில் மிதந்த இறைச்சித் துண்டுகளை
அவர்கள் ருசிபார்க்கத் தேடுகிறார்கள்..
பெண் என்பதால் 'அவள்' நிராகரிக்கப்பட்டாள்..
போரின் வேரிலிருந்து வலிசுமந்த பெண்ணை
இங்கு தலைவியாகப் பார்க்க
அவர்கள் தயாராக இல்லை.
வசதிகளுக்காக அவர்கள் வாக்களித்தார்கள்.
பொய்களுக்கு மட்டும் வாழ்க்கைப்பட்டார்கள்.
பூமியைப்படைத்தவள் ....ஆளட்டும் என
யாரும் வழிவிடத் தயாராக இல்லை.
சிந்திக்க மறுத்தார்கள்...
குடும்பத்தை நிர்வகிக்க அவளென்றார்கள் ..
நிர்வாகத்தை அவளிடம் கொடுக்கும்
நம்பிக்கை அவர்களிடமில்லை..
நண்பியாய்... கை கொடுத்தவள்...
நிர்மாணித்து , முகாமை செய்வாள்
எனும் நிச்சயம்.........
உற்ற நண்பர்களிடம் இல்லை.
இந்தப் பரந்த பூமி மைதானத்தின்...
ஆண்களோடு இணையாக ஓடுகின்றாள்...
அவர்களை விடவும் வேகமாக ஓடுகின்றாள்...
வயிற்றில் குழந்தைகள்...வாழ்வின் சுமை...
தோற்றுப் போகாமல்
வாழ்வையும் வளர்ச்சியையும்
ஒன்றாகக் கையிலெடுத்து
ஒன்றையொன்று விட்டுக் கொடுக்காமல்..
தன் சுயவலுவின் சூத்திரத்தில்..
இரும்புப் பெண்ணாக இறுகிக் கொண்டு..
ஓடுகிறாள்.....
போரின் காலமெல்லாம் ஓடிக்களைத்தவள்..
ஏழ்மையின் சுமையோடும்..தேடிப்பிழைத்தவள்
யாசகம் செய்து..கற்று முடித்தவள்....
தனக்கானதைத் தானே சேர்த்தவள்..
தன்னைத்தானே புடம் போட்டவள்....அந்த
வலிசுமந்தவள் வாழ்வை யாரும்
ஆராதிக்கவில்லை!
அருகில் இருந்தவர் அவமதித்தனர்.
கூடப் படித்தவர்.. எதிர்ப்பக்கம் நின்றனர்..
ஆசான்கள் பலபேர்......
அரசியல் செய்து அற்பர்களாயினர்..
விடாமுயற்சிக்கும், அர்ப்பணிப்புக்கும்
பலர்..அர்த்தமிடவில்லை....அவளைத். தமது
போட்டியென்றவர்....நெஞ்சுப் பைக்குள்
சேமித்த நஞ்சு நீரை....
வாய்ச் சொல்லால் தெளித்தனர்...
பலர்.... மௌனமாக இருந்து..
மானபங்கப்படுத்தினர்...
சிலரின் முகமூடிகள் கிழிந்து தொங்கின..
'அவள்' யாரையும் கெஞ்சவில்லை...
பிரதியுபகாரம் செய்வதாக..விளம்பவுமில்லை

'அவள்' என்னும் சாதாரணமானவர்கள்.......
இங்கு எதையும் சாதிக்க முடியாதென்றார்கள்?..
கீழிறங்கி வர வேண்டுமென்கிறார்கள்..
சிரித்துப் பேசி கலகலப்பாகத்தான்
வாக்குக் கேட்க வேண்டுமென்றார்கள்...
அமைதியாக இருந்தால் ..
யாரும் ஆதரிக்க மாட்டார்கள்
என்றார்கள்...
'அவள்' தன் இடத்திலிருந்து இறங்கி
வரவில்லை
'அவள்' அவளாகத்தான் நின்றாள்.
ஏழைக்காக இறங்கி வரலாம்..
இயலாதவர்களுக்காக இறங்கி வரலாம்..
'வாக்குக் கேட்பதற்கு ஏன் யாசகம்?
அர்த்தம் அவளுக்கு விளங்கவேயில்லை..
ஆசிரியரைப் புறந்தள்ளிய மாணவர்களைக்
கண்டாள்.
நண்பியை ஏமாற்றிய பல நண்பிகளைத்
தெரிந்து கொண்டாள்..
சகபாடிகள் பல 'சாப்பாடிகளாக'
இறந்த உருவங்களாக அசையக் கண்டாள்
நல்லாசான்களாக... வழிகாட்டிகளாக..
நினைத்தவர்கள்...அற்ப மனிதர்களாக..
பிழைத்துப் போவதற்கு அரசியல் செய்தார்கள்.
குடிபோதையில் நடனம் புரிந்தார்கள்..
'பெண்ணை விடுவதா? பெண் வருவதா?
பற்களைக் காட்டி... நாய் என்று சொல்லி
நகைப்புச் செய்தார்கள்....
மாணவர்கள் கூடியிருந்து
போதைப் பாக்குக்கு சுண்ணாம்பு போட்டார்கள்..
கல்விமானை நாய்கள் குதறி..
மானபங்கம் செய்தன...
நண்பர்கள் பகைவர்களாகினர்..
பகைவர்கள் நண்பர்களாகினர்..
'அவளை' வெல்லவா? இத்தனை சூழ்ச்சி...
ஒரு பெண்ணை வெல்வதற்கா?
இத்தனை இகழ்ச்சி...பொய்ச்சோடினைகள்..இல்லாத
வதந்திகள்.
இருட்டிலும் ஒலித்த தொலைபேசிகள்..
'அவளை வென்றுவிட வேண்டும்
என்று கங்கணம் கட்டின.
'அவள் என்பது இங்கு.....
அருவருப்பான.. பொருளானது...
ஆளுமையுள்ளவளாக இருப்பதை விட...
'அரசியல்' செய்பவளாக இருக்க வேண்டும்.
உண்மை என்பதை விட உருவகிக்கத் தெரிய வேண்டும்..
'நேர்மை' என்பதை விட
'நெளிவு சுழிவோடு' வாழ வேண்டும்..
'அவள்' வெல்வதென்பது... சாதாரணமானதல்லை..
'பெண்' வரவேண்டும் என்று
நீண்ட பேச்சாற்றி.. பக்கபலமாக
நிற்பதாக 'பகட்டு' விரித்தவர்கள்..
காணாமல் போனார்கள்!
சத்தியம் செய்தவர்கள்..உண்மைகள் உணர்ந்தவர்களாக...
காட்டிக் கொள்ளவில்லை..
பெண்ணிலைவாதம் பேசியவர்கள்...
'அவள்' என்பதை உச்சரிக்கவேயில்லை...
அவளுக்குள் நாங்கள்....
அடங்கத் தயாரில்லை என்கிறார்கள்...
ஆய்வின் முடிவில் 'அவள்' என்பது
காணாமல் போனது....'ஆணவள்' என்றனர்.
அவர்கள் அதற்குள் மனைவியைக் காணவில்லை
மகளைக் காணவில்லை..தாயைப் பார்க்கவில்லை..
தங்கையாகப் பலர் நேசிக்கவில்லை...
தமக்கையாக யாரும் தரிசிக்கவில்லை..
அரசியல் கலப்பு நிறைந்த,
அருவருக்கத்தக்க வாழ்வில்..
புகழ்ச்சியைத் தேடி அவள் புறப்படவில்லை..
அரசியல் செய்தனர்..
அவளையும் இழுத்துக் கொண்டனர்..
'அவள்' என்பதற்கு வாக்குகள் சேர்த்தனர்.
செய்த அரசியல் பொய்ப்பித்துபோனது....
நேர்மையும் உண்மையும்..அதற்குள்
நினைவற்று மாண்டது....
உண்மைகள் அனைத்தும் மௌனமாக நின்றன..
'அவள்' தோற்றுப் போனதாக அறிவித்தார்கள்..
உண்மையில் அவள் தோற்கவில்லை..
எதிரிகளாக இருந்தவர்கள் ஒன்றாகி நின்றனர்.
பகைவர்கள்....எல்லோரும்.....
கை கோர்த்துக்கொண்டார்கள்..
'சூழ்ச்சிதாரிகள்' அடையாளப்பட்டனர்..
'ஆணாதிக்கம்' பெண்களிடம் வெளிப்பட்டது..
பொய்யுரைத்தவர்.. சேறு பூசினார்..
.'நயவஞ்சகர்கள்' நாமே என்றனர்.
'அவள்' என்பதை
அர்த்தப்படுத்தியவர்களையும்,
ஆராதித்தவர்களையும்
இது அடையாளம் காட்டியது...
உண்மையில் இது 'பெருவெற்றி'
'தேர்தல் களம்' மல்யுத்தமும்...
பதவிகளைப் பறித்துக் கொள்வதற்கான
வில்யுத்தமும் நிறைந்த..
நியாயமற்ற மனிதர்களால்.... சதிக்காய்கள்..
நகர்த்தப்படும் 'போர்க்களம்'
எதிரியும் எதிரியும் ஒன்றாகச் சேர்த்து
இயல்பானவரை
நெரித்துக் கொல்லும்..அது
அவளாக இருந்தால் எரித்தே கொல்லும்...
எரித்தவன் வெல்வான்..
எரிந்தவள் ........சாம்பலாகி வரலாறாவாள்
இதுவே சரித்திரம்....
காலமே இதற்குச் சாட்சி.....
இது கலியுகம்..காரண காரியங்கள் இல்லாக்
கருமங்கள் நிகழும்..பாவங்கள் சேரும்..
கடுங்காலம்..இது..
இங்கு 'அவளுக்கு' யாரும் வழிவிடவில்லை..
இம்மண்ணுக்காக மகளிர் கொடுத்த விலையென்ன?
இத்தனை வலிகொடுத்தும் இப்பூமி ...
'அவளை'த் தாங்க தயாராக இல்லை.
அச்சம் தவிர்த்து...சமர் செய்தவர்
எல்லாம்...போயே மடிந்தனர்..
வல்லமை கொண்டவர்.. காணாமல் போயினர்..
போரோடு போய்...பொய்யாய் மறைந்தனர்..
பூமிக்கு கீழோ வானத்தின் மேலோ....
எங்கிருந்து பார்த்தும்...வலிக்கும்...வாழ்க்கை நமக்கு..
'அவள்' வலிமை நலிந்ததாய்..
சீரழிக்கப்பட்ட வரலாறாய் மாற...
எச்சமாய் நிற்கும் மிச்சங்களுமே..
தம் விதியை நோகும்...வாழ்வுடன்....
வாழ்க்கைப்பட்டன....
'அவள்' என்பது....நிந்திக்கப்பட்டதாய்....
ஒளித்து வாழும் ஒதுக்கப்பட்டதாய்......
அவதூறாக ...ஆனது....
'அவள்' மீள எழுந்து வருவாளா?
தனக்கென் ஓர் உலகைப்படைப்பாளா?

ஆனந்தி






பு.அஜினா
தரம்-08
யா/ உரும்பிராய்
சைவத் தமிழ் வித்தியாலயம்



எஸ்.லோஜினி
தரம்-10
யா/ உரும்பிராய்
இந்துக் கல்லூரி



இ.மதுசா
A/L
கருணை இல்லம்




K.இசைப்பிரியா
தரம்-11
யா/ உரும்பிராய்
இந்துக் கல்லூரி



மாணவர்களே!

நீங்களும்
உங்கள்
கைவண்ணங்கள்,
ஆக்கங்களை
அனுப்பலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555

# கற்கண்டு 5

## (Cat Gun - –Do or Die) இடை



கதை: இ.சு.முரளிதரன்
வரைகலை - மகேந்திரன் வினித்

திருப்பங்கள் நிறைந்த
சித்திரத் தொடர்கதை

